பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 01 புதன்கிழமை 18.10.2017 கதிர் 346

# அரசியல் கைதிகள் விடயத்தில் அரசியல் தீர்மானம் எடுங்கள்!




## நாடாளுமன்றத்தில் அரசுக்கு சம்பந்தன் நேற்று வற்புறுத்து



கொழும்பு, ஒக்ரோபர் 18

"தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தை வெறும் சட்டப் பிரச்சினையாக இனியும் பார்க்கமுடியாது. அது அரசியல் பிரச்சினையால் வந்தது. ஆகவே அரசியல் ரீதியான தீர்மானம் மூலமே அதற்குத் தீர்வு காணப்பட வேண்டும். அத்தகைய தீர்மானம் ஒன்றுக்கு ஜனாதிபதியும், பிரதமரும் அவர்களின் அரசும் வரவேண்டிய வேளை வந்து விட்டது.

– இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் விசேட கவனவீர்ப்புப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்."

பக்கம் 18

## 3 வருடங்களாக அரசுடன் பேசியும் கைதிகள் விடயத்தில் தீர்வு இல்லை

### நேற்று நாடாளுமன்றில் சுமந்திரன் எம்.பி. விசனம்

கொழும்பு, ஒக்.18

"அரசியல் கைதிகள் விடயத்தில் தீர்க்கமான முடிவை எட்டுவதற்காக நல்லாட்சி அரசுடன் 2015 ஜனவரி முதல் – சுமார் மூன்று வருடங்களாக – பல மட்டங்களில், பல தரப்பினருடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்திவிட்டோம் ஆனால் பலன் ஏதும் கிட்டவில்லை."

– இவ்வாறு நேற்று மாலை நாடாளுமன்றத்தில் விசனம் தெரிவித்தார் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளையில் எதிர்க்கட்சித் தலைவர்

பக்கம் 18

## உண்ணாவிரதமிருக்கும் கைதிகளின் வழக்குகள் இடமாற்ற சர்ச்சை குறித்து நாளை உயர்மட்டக் கூட்டத்தில் ஆராய்வு

### நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடக்கும்

கொழும்பு, ஒக்.18

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் மூன்று கைதிகளின் வழக்குகள் வவுனியா மேல் நீதிமன்றத்தில் இருந்து அநுராதபுரம் சிறைச் சாலைக்கு இடம் மாற்றிப்பட்டமை குறித்து அக்கைதிகளும் தமிழ் அரசியல் தலைமைகளும் ஆட்சேபம் வெளியிட்டு வரும்

பக்கம் 18



## யாழ். பல்கலைக்கழக மாணவர் உண்ணாவிரதத்தில் குதித்தனர்

### தற்காலிகமாக நேற்றே நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம்,ஒக்.18

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தை ஒட்டி யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றுக் காலை முதல் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், பின்னர் யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தினரின் வேண்டுகோள் மற்றும் ஆலோசனைகளை

பக்கம் 18

## சகல இனங்களையும் ஒன்றிக்கும் தீப ஒளி இன்று பிரகாசிக்கட்டும்




யாழ்ப்பாணம், ஒக்.18

இந்து பக்தர்கள் இன்று ஏற்றும் தீப ஒளி நாட்டின் அனைத்து மக்களினதும் இதயங்களில் ஒளியேற்றி சகல இனங்களையும் ஒன்றிக்கும் பாலமாக அமையட்டும்.

ஜனாதிபதி

பக்கம் 18




## இனி, முதலமைச்சர் பதவிக்கு 'இறக்குமதிகள்' இல்லையாம்!

### தமிழரசு தீர்மானம் என்கிறார் சி.வீ.கே.

யாழ்ப்பாணம்,ஒக்.18

இனிவரும் காலங்களில் வடமாகாண முதலமைச்சராக இறக்குமதிகளைக் கொண்டு வரப்போவதில்லை என தமிழரசுக் கட்சி முடிவெடுத்துள்ளதாக வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

பக்கம் 18

## ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்ட தமிழரசுக் கட்சியினர் பின்னடிப்பு

### சிவசக்தி ஆனந்தன் காட்டம்



கொழும்பு, ஒக்.18

இடைக்கால அறிக்கை தொடர்பில் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டி முடிவெடுக்காமல் தமிழரசுக் கட்சி தன்னிச்சையாகச் செயற்படுகிறது என கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின்

பக்கம் 18



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
உங்கள் நாவிற்கு இனிய ஐஸ்கிறீம் வகைகளை சுவைத்து மகிழ நாடுங்கள்
லிங்கன் கிறீம் ஹவுஸ்
இல.119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7327
இல.526, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 4945
இல.213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 221 6660
No.6055 Steeles Ave E, Toronto, ONT, MIX OA7, Canada. T.P: 0014162925464




# புதுக்குடியிருப்பு காணிகளை விடுவிக்கக் கோரி குடைகளுடன் கொட்டும் மழையில் போராட்டம்!

முல்லைத்தீவு, ஒக். 18

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக் குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள இராணுவத்தால் சுவீ கரிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணியை உடனடியாக விடுவிக்கக் கோரி மக்கள் பிரதேச செயலக வாயிலை முற்றுகையிட்டு நேற்று போராட்டத் தில் ஈடுபட்டுள்ளனர் .

கொட்டும் மழைக்கு மத்தியில் குடைகளுடன் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயல கத்துக்குமுன்பாகவுள்ளஇராணுவத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணி 19 ஏக்கரை விடுவிக்குமாறு கோரி கடந்த மாசி மாதம் ஒரு மாத காலமாக மக்கள் தொடர்ந்து போராடி வந்தனர்.

இந்த நிலையில், மக்களின் காணி கள் 3 கட்டங்களாக விடுவிக்கப்படும் என்றும் இராணுவம் அறிவித்த போது அதனை மறுத்த மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் இந்த விடயத்தை எழுத்துமூலம் தாம் தருகி றோம் என்றும் தெரிவித்திருந்தனர்.

3 கட்டங்களாக இராணுவம் விடுவிக் கும் என தெரிவித்து எழுத்துமூலமாக 20 பேரது 7.75 ஏக்கர் காணி இரண்டு வாரத்தில் விடுவிக்கப்படும், 29 பேரது 10 ஏக்கர்காணி முகாமில் அமைக்கப்பட் டுள்ள கட்டடங்களை நீக்கி புதிய இடத்துக்கு கொண்டுசெல்வதற்காக 3 மாதங்கள் தேவைப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

3 மாதத்திங்களில் விடுவிக்கப்படும் என பொன்னம்பலம் வைத்தியசாலை காணி யானது 6 மாதத்தில் விடுவிக்கப் படும் எனவும் எழுத்துமூலம் உறுதி மொழி வழங்கி முதற் கட்டமாக 20 பேரது 7.75 ஏக்கர் காணி விடுவிப்போடு மக்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

இருப்பினும் அரச அதிகாரிகளின் வாக்குறுதியை நம்பி ஏமாந்துள்ளோம் என்றும் 7 மாதங்கள் கடந்தும் இரண்டா வது கட்டமாக விடுவிப்பதாக கூறிய காணியை கூட இதுவரை விடுவிக்க வில்லை. அதிகாரிகளை நம்பி ஏமாந்து விட்டோம் வாக்குறுதி தந்தவர் கள் உடனடியாக எமது காணி யை மீட்டு தரவேண்டுமெனமக்கள்கோரியிருந்தனர்.

இதுதொடர்பில் எந்தவித ஆக்கபூர்வ மான பதிலும் கிடைக்காத நிலையில் காலக்கெடு முடிஞ்சு போச்சு எமதுநிலம் எமக்குவேண்டும்எனபோராட்டத்தில்ஈடு பட்ட மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், மூன்றுமாத தவணை முடிஞ்சு போச்சு ஆறுமாத தவணை அழிஞ்சு போச்சு எமது நிலம் எமக்கு வேண்டும். அரச அதிகாரிகளே எமது காணி விடு விப்புக்கு சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள் அரச அதிகாரிகளே கொடுத்த வாக்குறுதி எங்கே? குப்பைக் குள்ளா போன்ற பதாகைகள் தாங்கிய வாறு கொட்டும் மழைக்கு மத்தியில் அரச அதிகாரிகளின் பதிலுக்காக பிர தேச செயலக வாசலை மூடி போராட் டத்தில் ஈடுபட்டுள்ளனர் .

இந்த நிலையில் மக்கள் போராட்ட இடத்திற்கு சென்ற பிரதேச செயலாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் ஆகியோர் மக்களுடன் பேச்சு நடத்தியுள்ளார்கள்.

அத்துடன், 682 ஆவது படைத் தள பதி பிரதேச செயலருடன் பேச்சுக்கள் நடத்த பிரதேச செயலகம் சென்ற போது மக்கள் மறித்து நின்றுள்ளனர்.

இந்நிலையில் மக்கள் வீதியை மறித்து போராட முற்பட்டு சிறிது நேரம் பதற்ற நிலைமை தோன்றியுள்ளது.

தொடர்ந்து பிரதேச செயலாளர் மற் றும் புதுக்குடியிருப்பு பொலிஸ் அதிகாரி நாடாளுமன்றஉறுப்பினர் சிவனேசன் ஆகியோர் மக்கள் பிரதிநிதிகளை பிர தேச செயலகத்திற்குள் அழைத்துப் பேச் சுக்களை நடத்தியுள்ளனர்.

இதன்போது காணிஉரிமையாளர்கள் தங்கள் கோரிக்கையை பிரதேச செய லாளருக்கும் நாடாளுமன்ற உறுப்பின ருக்கும் கொடுத்துள்ளார்கள்.

இந்தநிலையில், எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவட்ட அபி விருத்திக்குழுக்கூட்டத்தில் இதுதொடர் பில் எடுத்துரைக்கப்படவுள்ளது.அதன் பின்னர் மக்கள் தமது முடிவைத் தெரி விக்கமுடியும் என நாடாளுமன்ற உறுப் பினர் தெரிவித்துள்ளார் .

இதனையடுத்து போராட்டத்தை கைவிட்டு மக்கள் சென்றுள்ளனர். நேற்று இடம்பெற்ற மக்கள் போராட்டத்தையும் இராணுவத்தினர் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து அச்சுறுத்தல் விடுத்த னர் என மக்கள் விசனம் தெரிவித்துள்ள னர். (81)

# போலியான லொத்தர் சீட்டுகளை வைத்திருந்த இளைஞர் கைது!



கொழும்பு, ஒக். 18

போலியான லொத்தர் சீட் டுகளைதன்வசம்வைத்திருந்த இளைஞர் ஒருவரை உடப்புஸ் ஸல்லாவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலொன்றிற் கமைய, நேற்று முன்தினம் இரவு குறித்த இளைஞனை சோதனைக்கு உட்படுத்திய போது அவரிடமிருந்து போலி யான லொத்தர் சீட்டுகளை பொலிஸார் கைப்பற்றியுள்ள னர்.

இதன்போது, அந்தஇளை ஞரிடமிருந்து 3629 லொத்தர் சீட்டுகள் கைப்பற்றப்பட்டுள் ளன.

10.12.2017 திகதிக்கு அமைய அச்சிடப்பட்டிருந்த குறித்த லொத்தர் சீட்டுகள் 'அபிவிருத்தி லொத்தர் ச பையின்' சீட்டுகளை போன்று போலியாக அச்சிடப்பட்டிருந்த தோடு, ஒரே தொடரிலக்கத்தில் நூற்றுக்கணக்கான லொத்தர் சீட்டுகள் இதன்போது கைப் பற்றப்பட்டுள்ளன என பொலி ஸார்மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்த போலி லொத்தர் சீட்டு களில் 20,100,1000 போன்ற பரிசு தொகைகளையுடைய சிலசீட்டுகளும்காணப்பட்டன எனப்பொலிஸார்தெரிவித்தனர்.

கண்டி பகுதியை சேர்ந்த 29 வயதுடைய நபரொருவரே இதன்போது கைது செய்யப் பட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர் நுவரெலியா நீதிமன்றில் ஆஜர் படுத்தப்ப டவுள்ளார்.

இந்த போலி லொத்தர் சீட்டு தொடர்பிலான விசாரணை களை உடப்புஸ்ஸல்லாவ பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி தம்மிக்க விஜேசிங்ஹ தலைமையிலான குழுவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

# தேசிய மட்டத்தில் 'வவுனியா குண்டு தோசை' முதலிடம்!




வவுனியா, ஒக். 18

உலக உணவு தினத்தை முன்னிட்டு 'உள்நாட்டு உயிர்ப் பல்வகைமையின் ஊடாக போசனை மிக்க உணவுகள்' எனும் தலைப்பின் கீழ் தேசிய உணவு கொண்டாட்டமானது நேற்று முன்தினம் கண்ணொரு வையில் அமைந்துள்ள தாவர கரு மூல வள நிலையத்தில் மத்திய விவசாய அமைச்சு ஊடாக நடத்தப்பட்டது.

இதில் உள்நாட்டு உணவு உற்பத்தியில் ஈடுபடும் உணவு உற்பத்தியாளர்களிடையே இரண்டு வகையாக மாவட்ட மட்ட போட்டிகள் நடைபெற்று இரண்டுபோட்டியாளர்கள்தேசிய மட்டத்திற்குத் தேர்வாகினர்.

வேர்க்கிழங்கு பயிர்கள் மற்றும்தானியப் பயிர்களிலான பெறுமதி சேர் உணவு தயாரிப் பில் கூமாங்குளம் - அம்பாள் விவசாய பெண்கள் அமைப் பைச் சேர்ந்த இராசலிங்கம் கலாநிதி என்பவர் தரமான போசனை பெறுமதியான 'குண்டு தோசை' தயாரிப்பில் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்திற்குத் தேர்வாகினார்.

இவர் தேசிய மட்டத்தில் நடைபெற்ற 25 மாவட்ட, 6 இடை மாகாண போட்டியாளர் களிற்கிடையே பங்குபற்றி வவுனியா குண்டு தோசைக்கு முதல் இடத்தைப் பெற்றுத் தந்துள்ளார்.

பழங்கள், மரக்கறிகள் மற்றும் இலைமரக்கறிப் பயிர்களிலான பெறுமதி சேர் உணவு தயாரிப் பில் கூமாங்குளம் - அம்பாள் விவசாய பெண்கள் அமைப் பைச் சேர்ந்த சந்திரசேகரம் செந்தில்மணி என்பவர் வெள் ளரிப்பழத்தில் இருந்து தரமான பழக்கலவை பானம் தயாரிப் பில் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்திற்குத் தேர்வா கினார்.

இவர் தேசிய மட்டத்தில் நடைபெற்ற 25 மாவட்ட, 6 இடை மாகாண போட்டியாளர் களுக்கிடையே பங்குபற்றி மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இப் போட்டியாளர்களை வழிநடத்திச் சென்ற வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவ சாய திணைக்கள மகளிர் விவ சாய விரிவாக்க உத்தியோகத்தர் திருமதி. அல்ஜின் குரூஸ் அவர்களுக்கும் மேற்படி போட் டியாளர்களினது பணி, வவு னியா மண்ணிற்கு பெருமை சேர்க்கும் வகையில் மேலும் தொடர தமது வாழ்த்துக்களை யும் பாராட்டுதல்களையும் வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப் பாளர் தெ.யோகேஸ்வரன் தெரி வித்துள்ளார். (க-100)

# விஜயின் கட் – அவுட்டுக்குத் தீ!

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். நகரப் பகுதியில், கஸ்தூரியார் வீதியில், ராஜா தியேட்டருக்கு முன்பாக நடிகர் விஜயின் ரசிகர்களின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டிருந்த அவரின் 75 அடி உயர 'கட் – அவுட்' நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் தீயிடப்பட்டது. அதன் கீழ்ப் பகுதி அதனால் சேதமடைந்தது.

விஜயின் புதிய படம் 'மெர்சல்' இன்று விடிகாலை 3 மணிக்கு வெளியாக இருக்கையில், முதல் நாள் இரவு இந்தக் கட் அவுட்டுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் 'கட் – அவுட்'டை விரைந்து திருத்தியமைப்பதில் விஜய் ரசிகர் கூட்டம் நேற்று முனைப்பாக இருந்தது.

இதேசமயம், வல்வெட்டித்துறை சந்திப்பகுதியில் கட்டப்பட்டிருந்த விஜயின் பதாகை நேற்று முன்தினம் இரவு பொலிஸாரின் உதவியுடன் அகற்றப்பட்டது.

பொதுமக்கள் சார்பில் வல்வெட்டித்துறை நகரசபைக்கு முறையிடப்பட்டமையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முன்னதாக வல்வெட்டித்துறைச் சந்தியில் வைக்கப்பட்ட விஜயின் பதாகை இனந்தெரியாதோரால் கிழித்துச் சேதமாக்கப்பட்டது.

அதன் பின்னர் தீருவில் வீதியில் தொங்கவிடப்பட்ட புதிய பதாகையே தற்போது அகற்றப்பட்டுள்ளது. (உ)

# புரிந்துணர்வுக்கான வாய்ப்பை வழங்கும் தீபாவளித்திருநாள்

## அமைச்சர் சுவாமிநாதன் செய்தி



கொழும்பு, ஒக்.18

இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வுக்கானவாய்ப்பைத் தீபாவளித் திருநாள் வழங்குகின்றது என அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தனது தீபாவளிச் செய்தியில் தெரிவித்துள்ளார். அந்தச்செய்தியின்முழுவிவரம் வருமாறு:–

இந்துமக்களின்உயர்ந்தசமயப் பண்டிகைதினமான தீபாவளிப்பண்டிகையைமுன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில்பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இருளானது தனது உருவத்தைக் காட்டி பிறபொருளை மறைத்துவிடும். இதனையே 'ஒருபொருளும்காட்டாது இருள் உருவம் காட்டும்' என்கிறது திருவருட் பயன். இந்த இருளை அகற்றக் கூடிய வல்லமை ஒளிக்கு உண்டு. ஒளிதரும் தீபமானது இருளை அகற்றுகிறது; பிறபொருளைக் காட்டுகிறது. இருட்டு நேரத்தில் தீபத்தை கையோடு எடுத்துச் சென்றால், அதுவே வழிக்குத் துணையாக அமையும். அதுபோலவே மனிதனுடையவாழ்க்கைப்பாதையின் பயணத்திற்கும் அருட்தீபம் துணை நிற்கிறது. அத்தகைய அருட்தீபமாகிய ஆன்மீகஞான ஒளியை இறைவழிபாடு மூலம் பெறமுடியும். அதற்குரிய சிறப்பு வாய்ந்த ஒரு நன்னாளாகவே தீபாவளி அமைந்திருக்கிறது. இலங்கை வாழ் இந்துக்கள் இந்த விசேட பண்டிகைத் தினத்தில் உலகெங்கிலுமுள்ள தங்களது சகோதர இந்து மக்களுடன் இணைந்து கொள்கின்றனர். இலங்கையில் இன்று தீபாவளியும் அதன் எதிர்பார்ப்புக்கள் நிறைந்த தீப ஒளியும் சமூகங்களுக்கு மத்தியில் சிறந்த புரிந்துணர்வுக்கான சந்தர்ப்பத்தை வழங்குகிறது.

தீமையையும் அறியாமையையும் நீக்கி ஒளியை வெற்றி கொள்வது மனிதவாழ்வின் முடிவில்லாத தேடலாகும். தீபாவளியும் அதன் எதிர்பார்ப்புகள் நிறைந்த தீப ஒளியும் சமூகங்களுக்கு மத்தியில் சிறந்த புரிந்துணர்வுக்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. மக்களுக்கு மத்தியில் சுபீட்சத்தை அதிகரித்துள்ளது. மேலும்மிகநீண்டகாலமாக எமது மக்களைப் பிரித்து வைத்திருந்த எல்லா வேறுபாடுகளையும் களைவதற்குரிய தருணம் அமைந்துள்ளது. அதர்மத்தைத் தோற்கடித்து தர்மத்தை நிலைபெறச் செய்தமையை எடுத்தியம்பும் உலகவாழ் இந்து பக்தர்கள் பக்தி கமழும் மனதுடன் கொண்டாடும் புனித தீபாவளிப் பண்டிகையினை முன்னிட்டு எனது இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில்பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

## நீதிபெறுவதற்காகக் காத்திருக்கும் அனைவருக்கும்

# சிறைக்கூடங்களில் தவிக்கும் மக்களுக்காகவும் விடிவுபெற்று உறவுகளோடு வாழ மன்றாடுவோம்

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் கலாநிதி ஆறு.திருமுருகன்



"அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்ற சிந்தனைக்குரிய கருத்தினை வெளிப்படுத்தும் நாளே தீபாவளி. தீமை செய்பவர்கள்அழிந்துபோய்விடுவார்கள். நன்மை செய்பவர்கள் தாமும் நன்றாக வாழ்ந்து, பிறரையும் வாழவைப்பார்கள். நரகாசுரன்அப்பாவிகளுக்குதுன்பம் விளைவித்தான். துன் புற்றவர்கள் இறைவனிடம் முறையிட்டனர். பரமாத்வாகிய கிருஷ்ணபகவான் அதர்மனாகிய நரகா சுரனைவதம் செய்தார். இரு ளில் வாழ்ந்தவர்கள் ஒளிபெற்ற நாளாகநரகாசுரன்வீழ்ந்ததினம்அனுட்டிக்கப்படுகிறது. மக்களை ஆள்பவர்கள் இத்தகைய தெய்வீக வரலாறுகளை உணர வேண் டும். அறத்துக்குமாறாக ஆட்சிபீடத் தில் இருப்பவர் கள் என்றோ ஒருநாள் இறைவனுக்குப் பதில் சொல் லியே ஆக வேண்டும். தீபாவளிதிருநாள் இதன் மகத்துவத்தை உணர்த்தும் பெருநாள். 'தர்மமே வெல்லும்' என்ற தாரக மந்திரத்தை மக்கள் உணர் வதற்கு வாய்ப்பளிக்கும் திருநாள்.

மனிதர்களாகிய நாம் அதர்ம வழிகளை கைவிட்டு தர்மவழியில் வாழ்வதற்கு இந் நாளை உணர்வுபூர்வமாக உணர்ந்து கொள்ள வேண்டும். எங்களுக்குள் இருக் கும் அறியாமையைப் போக்கி எம்மை நாமே சீரியபாதையால் வழிநடத்த இந் நாளில் இறைவனிடம் வாழ்வுகேட்கவேண்டும். புறத்திலே ஆடைகளை மாற்றுவது மட்டுமல்லாமல் அகத்திலும் அழுக்கான எண்ணங்களையும் இந்நாளில் மாற்ற வேண்டும். நீதி நெறிக்காக காத்திருக்கும் மக்களுக்காக இந்நாளில் நாம் பிரார்த்திக்கவேண்டும். சிறைக்கூடங்களிலும் இருட்டறைகளிலும் தவித்த வண்ணம் இருக்கும் மக்கள் விடிவுபெற்று தமது உறவுகளோடு வாழ இந்நாளில் இறைவனை மன் றாடுவோம். எம் மண்ணில் அல்லல்படும் அப்பாவி மக்களுக்கு ஆறுதல்செய்ய முன்வருவோம். ஆடம்பரங்களைத் தவிர்த்து அறக்காரியங்களை ஆற்றுவோம். ஏழு ஜென்மத் துக்கு வரக்கூடிய கல்வியைக் கற்கவும் ஆர்வம் செலுத்துவோம். மானிடத்தை அழிக்கும் மதுச்சாலைகளை மூடிவிட வேண்டுதல் செய்வோம். வாழ வேண்டிய வயதில் வாளோடு திரிந்து பிறர்க்கு கெடுதிசெய்யும் அபாயச் சூழலை அடியோடு மாற்றுவோம். எல்லோரும் எங்கள் உறவுகள் என்ற உயர் தத்துவத்தை உணர்த்து வோம். பழிதீர்க்கும் படலத்தைவிட்டு பண்புடையவர்களாக அனைவரும்மாறுவோம். நீதிநெறிகளிலும்கல்வியிலும்உறவுகளைப் பேணுவதில் உத்தமர் தமிழர் என்று உலகம் உரைத்த வார்த்தையை மீளவும் கட்டி வளர்ப்போம். அவப்பொழுதாக காலத்தை செலவு செய்யாமல் ஒவ்வொரு விநாடிகளையும் தவப்பொழுதாகக் கருதிவாழ்வோம். பிறர் உழைப்பில் வாழ்வதை விடுத்து. ஒவ்வொருவரும் சுய உழைப்பால் முன்னேறவழிசெய்வோம். தீபத்திருநாள் நம்மைநாம் திருத்துவதற்கு உகந்த நாள் எனக்கருதி அனைவரும் புனிதம் பெறுவோமாக!

செஞ்சொற்செல்வர் கலாநிதிஆறு.திருமுருகன்
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தலைவர், சிவபூமிஅறக்கட்டளை
உபதலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்.

# சிவாஜி, சிவகரன் விசாரணைக்கு அழைப்பு

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், மன்னார்பொதுஅமைப்புகளின் ஒன்றியத் தலைவர் எஸ்.சிவகரன் ஆகியோர் விசாரணைக்காகப் புலனாய்வு அதிகாரிகளினால் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

பிக்கு ஒருவர்கொடுத்தமுறைப்பாட்டின்அடிப்படையில் சிவாஜிலிங்கத்தைக் கொழும்புக்கு விசாரணைக்குவருமாறுகொழும்புகுற்றத்தடுப்புப் பொலிஸார் அழைத்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தேச மன்னார் விஜயத்துக்கு எதிராகப் பகிரங்க அறிக்கைவெளியிட்டமைக்காகசிவகரன்கொழும்பு பயங்கரவாத எதிர்ப்பு விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

## அரசியல்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுவெறும்சட்டப்பிரச்சினை அல்ல. அரசியல்பிரச்சினையால் எழுந்தது. அரசியல் ரீதியான நியாயத்தை நீங்கள் செய்யத் தவறியமையாலேயே அவர்கள் அவ்வாறு நடக்க நேர்ந்தது.

அரசியல் பிரச்சினையால் எழுந்த சிக்கலுக்கு அரசியல் ரீதியாகவே தீர்வு காண வேண்டும். சட்ட ரீதியாக அல்ல.

ஆகவே இந்தக் கைதிகள் அரசியல் கைதிகளே. அப்படித்தான் நாங்கள் அவர்களைப் பார்க்கிறோம்.

தங்கள்வழக்குகள்வவுனியா மேல் நீதிமன்றத்திலிருந்து அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டமையை ஆட்சேபித்து மூன்று கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதமிருக்கின்றனர். அவர்களின் உடல் நிலைமை மோசமானகட்டத்தைஎட்டியுள்ளது.

வவுனியா நீதிமன்றம் தமிழ் மொழியில் வழக்குகளை விசாரிக்கின்றது. அநுராதபுரம் நீதி மன்றம் அப்படி அல்ல.

தமிழரான கைதி ஒருவர் தமது வழக்கு தமிழ்மொழி நியாயத்திக்க எல்லைக்குள் விசாரிக்கப்பட வேண்டும் என்று கோருவது அரசமைப்பு ரீதியாக அவருக்கு உறுதி செய்யப்பட்ட உரிமையாகும்.

அந்தவழக்கைஅநுராதபுரத்துக்கு மாற்றுவது அந்தக் கைதியின் அரசமைப்பு ரீதியான உரிமையில் தலையிடும் விடயமாக அமைகிறது.

ஆகவேதான், இந்தக் கைதிகள் அனைவரையும் விடுவித்து நல்லிணக்கத்துக்கும் சக வாழ்வுக்கும் வழி செய்யுமாறு கோருகின்றேன். – என்றார். (உ)







# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## எல்லாமே அரசியல் சுயநலம்

புதைகுழி சேற்றுக்குள் விழுந்து புதைந்து கொண்டிருப்பவன் அதிலிருந்து வெளியே வருவதற்காக அந்தப் புதைகுழிக்குள் இருந்தே உன்னி, உன்னி முயற்சிப்பான். அவன் வெளியே வருவதற்காக ஒவ்வொரு தடவையும் புதைகுழிச் சேற்றை அழுத்தி உந்தும் போது, சேறு இன்னும் அவனைப் புதைக்கும். வெளியே வரும் தனது முயற்சி தன்னை மேலும் புதைக்கும் என்பது புலனாகாமலேயே அவன் புதைவான். வெளியிலிருந்து ஒரு துணை, பற்றுக்கோடு வந்தாலன்றி புதைகுழி சேற்றிலிருந்து வெளிவருவது கஷ்டம்.

பேரினவாதப் புதைகுழியில் வீழ்ந்திருக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினது நிலைமையும் இதுதான் போலும்.

ஆட்சியிலிருந்த போது - அதிகாரத்தில் கோலோச்சிய போது - இந்த நாட்டின் சிறுபான்மையினரைப் புறம் தள்ளி, துவேஷித்து, பாகுபாடு காட்டி, பேரினவாத மேலாதிக்க மமதையோடு நடந்து கொண்டார் அவர்.

அதனால் அதிகாரத்திலிருந்து தூக்கி வீசப்பட்டார். சிறுபான்மை இனத்தவர்களும் ஒன்றுசேர்ந்துதான் அவரை ஆட்சிக் கட்டிலிருந்து வீட்டுக்கு நடையைக் கட்ட வைத்தனர்.

ஆனால், பட்டறிவிலிருந்து அவர் பாடம் கற்பவராக இல்லை. திருந்திய புதிய மனிதராகவும் அவர் எழுச்சி கொள்பவராக இல்லை.

புதைகுழியில் விழுந்தவன், அதிலிருந்து வெளியே வரும் நோக்கில் மேலும் மேலும் புதைகுழிச் சேறைக் காலால் உன்னி, அழுத்தி, முயன்று அந்தச் சேற்றிலேயே புதைந்து போகின்றமையைப் போல - அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காக பேரினவாத மேலாதிக்கச் சிந்தனை என்ற சகதியில் விழுந்த மஹிந்தர், பறிகொடுத்த அதிகாரத்தை மீளக்கைப்பற்றும் முயற்சி என்று நினைத்து மேலும் மேலும் பேரினவாத சகதிக்குள் முழுதாக மூழ்கி வருகின்றார்.

பறிகொடுத்த அதிகாரத்தை - ஆட்சியை - மீளக் கைப்பற்றுவதற்கு ஒரே வழி பேரினவாதத் திமிர்த்தனத்தை வெளிக்காட்டுவதுதான் என்று கருதத் தலைப்பட்டுவிட்டார் அவர்.

புதிய அரசமைப்பு முயற்சிகள் தொடர்பில் தென்னிலங்கை பௌத்த, சிங்கள மேலாதிக்கச் சக்திகளைத் தட்டி, எழுப்பி, உசுப்பேற்றி விடும் விதத்தில் அவர் வெளியிடும் கருத்துகள் இதனைத்தான் புலப்படுத்தி நிற்கின்றன.

நாட்டுக்கான புதிய அரசமைப்பு வருவதை அடியோடு எதிர்க்கும் அவர், இந்த நல்லாட்சி அரசு புதிய அரசமைப்பில் ஆக இரண்டே இரண்டு விடயங்களுக்கு மட்டும்தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஆணைபெற்றது என்றும், அதற்கு அப்பால் செல்லும் அதிகாரம் இந்த நல்லாட்சி அரசுக்குக் கிடையாது என்றும் கூறுகின்றார்.

அந்தக் கூற்றில் கூட, ஓர் அரசியல் சுயநலம் தொக்கி நிற்பது வெளிப்படையானது.

தேர்தல் சீர்திருத்தத்துக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கும் மட்டும்தான் நல்லாட்சி அரசுக்கு மக்கள் ஆணை அளித்துள்ளார்கள் என்று அவர் கூறுகின்றார்.

மஹிந்த ராஜபக்ஷ பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்ட கையோடு அரசமைப்புக்கு 19 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அதன்படி நாட்டில் ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக மக்களால் தெரிவுசெய்யப்பட முடியாது என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் மஹிந்த ராஜபக்ஷ இனிமேல் நாட்டின் ஜனாதிபதியாக வரவே முடியாது. நாட்டின் ஆட்சித் தலைவராக அவர் இனி வருவதற்கான வாய்ப்பை அந்த 19 ஆவது திருத்தம் இன்று அடைத்துவிட்டது.

ஆக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை இந்த நாட்டில் இருக்கும் வரை - 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் நடைமுறையில் உள்ளவரை - நாட்டினது தலைவராகத் தாம் வரவே முடியாது என்பது அவருக்கு நன்கு தெரியும்.

அதனால்தான் புதிய அரசமைப்பு வரக்கூடாது என்று கூறும் அவர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படுவதை மட்டும் தனித்து வரவேற்கின்றார்.

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பது இதனைத்தான்.

இதே காரணத்துக்காகத்தான், முன்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பேன் என்று நாட்டு மக்களுக்கு உறுதியளித்து, அந்த வாக்குறுதியின் பேரில் வெற்றி பெற்று, ஜனாதிபதியாகிய மைத்திரிபால சிறிசேன, அதனைச் செய்யாமல் இப்போது பின்வாங்குகின்றார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்தால் நாட்டின் தலைவராக மீளவும் வருவதற்கு மஹிந்தருக்கு இருக்கும் அரசமைப்புத் தடை நீங்கி விடும். அந்த ஒன்றை வைத்தே அவர் அரசை - ஆட்சியை மட்டுமல்ல, சு.கவின் தலைமைப் பதவியையும் கைப்பற்றி விடுவார் என மைத்திரி தரப்பினர் கருதுகின்றனர்.

புதிய அரசமைப்பு வந்தாலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை தொடர வேண்டும் என்று மைத்திரி தரப்பும் -

புதிய அரசமைப்பு வரவே கூடாது, ஆனால், நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்று மஹிந்த ராஜபக்ஷ தரப்பும் -

வலியுறுத்துவதன் பின்னணி இந்த அரசியல் சுயநல சிந்தனைப் போக்குத்தான்.

# கஜேந்திரகுமாரை விவாதத்திற்கு அழைக்கின்றார் சிவாஜிலிங்கம்!

கொழும்பு, ஒக். 18

அரசியல் கைதிகளின் விடயம் தவிர்ந்து வேறு எந்த விடயமாக இருந்தாலும் பரவாயில்லை என்னுடன் விவாதத்திற்குவாருங்கள்எனவடமாகாண சபை உறுப்பினர்எம்.கே.சிவாஜிலிங்கம், த.தே.ம.முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு வந்த ஜனாதிபதியை முதலில் சென்று சந்தித்ததும், பேசியதும் சிவாஜிலிங்கமே. இது முன்னதாகவே திட்டமிடப்பட்டது. இவர் அரசுக்குத் துணை போகின்றார் என நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் யாழ். ஊடகமையத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதியின் யாழ். விஜயத்தின் போது பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கறுப்புக்கொடி ஏந்தி இந்தப் போராட்டங்கள் நடைபெற்றன.

முதலில் போராட்ட இடத்திற்கு நானே வந்தேன். அதன் பிறகு 45 நிமிடங்கள் கழிந்த பின்னரே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வந்தார். இந்த நிலையில் நான் அரசுடன் இணைந்து கொண்டு செயற்படுகிறேன் என அவர் குறிப்பிடுகின்றமை அப்பட்டமான பொய்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் குறித்த கருத்துக்கு நான் கடுமையான கண்டனம் வெளியிடுகின்றேன்.

அரசியல் கைதிகள் விடயத்தை அரசியல் ஆக்க வேண்டாம், கைதிகளின் விடயத்தில் அரசியல் இலாபம் தேடவேண்டாம்.

அரசியல் கைதிகளின் விடயத்தை தவிர்த்து வேறு எந்த விடயமாக இருந்தாலும் என்னுடன் நேரடி விவாதத்திற்கு வாருங்கள் என சிவாஜிலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் சுமந்திரனின் பெயரை பயன்படுத்தாமல் உங்களால் அரசியல் செய்ய முடியுமா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடயம் தொடர்பில் என்னுடன் சேர்ந்து அரசியல் கைதிகளின் உறவினர்களும் வடமாகாண ஆளுநரை சந்தித்திருந்தார்கள். இதன்போது ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார்கள்.

அந்த அழைப்பை நாம் ஏற்க வேண்டும். அரசியல் கைதிகள் போராட்டம் நடத்தும் அதேவேளை பேச்சுகளையும் நாம் முன்னெடுக்க வேண்டும். தயவு செய்து இதை அரசியலாக்காதீர்கள் எனவும் அவர்

## 'சின்மய நாதம்' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம் சின்மயா மிஷனின் (ஒன்று கூடல்) சங்கமம் நிகழ்வு மற்றும் சின்மய நாதம் காலாண்டுச் சஞ்சிகை மலர் 18 (ஐப்பசி/மார்கழி - 2017) வெளியீடு தீபாவளி தினமாகிய இன்று மாலை 4 மணிக்கு நல்லூர் சின்மயா மிஷன் ஞானவேல் ஆச்சிரமத்தில் (இல. 700, பருத்தித்துறை வீதி) இடம்பெறும். (இ)

## புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தோர் மாதகலில் பதிவு

மாதகல், ஒக். 18

தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இம்முறை சித்தியடைந்தவர்கள் மாதகல் கல்வி அபிவிருத்தி சங்கத்தில் தமது விவரங்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மாதகலில் வசித்து வெளிப்பாடசாலையில் கல்வி கற்று இந்த வருடம் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோரே தமது விவரங்களை மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கத்தில் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

## சண்டிலிப்பாய் இந்து நிறுவுநர் நினைவுநாளும் பரிசளிப்பு விழாவும்

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நினைவுநாளும் பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்த விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பிரதம விருந்தினராகவும் யாழ். போதனா வைத்தியசாலை ஊ மருத்துவ சமூக சேவையாளர் இ.வாகீசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் மா.சின்னத்தம்பி ஆற்றவுள்ளார். (இ)

## பண்டத்தரிப்பில் தீபாவளி விழா

பண்டத்தரிப்பு, ஒக். 18

மறுமலர்ச்சி இளைஞர் கழகமும் மாணவர் மன்றமும் இணைந்து நடத்தும் தீபாவளி பெருவிழா இன்று புதன்கிழமை மாலை 4 மணியளவில் காலையடி பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் இடம்பெறும். (இ)

## தீபாவளிக் கொண்டாட்டம்

இளவாலை, ஒக். 18

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 4 ஆம் ஆண்டு பூர்த்தி விழாவும் தீபாவளிக் கொண்டாட்டமும் இன்று தீபாவளி தினத்தன்று மாலை 5 மணிமுதல் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். இதன் போது கௌரவிப்பு நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் மற்றும் இசை நிகழ்வுகள் இடம்பெறும். (இ)

## பொதுக்கூட்டம்

உரும்பிராய், ஒக். 18

உரும்பிராய் விவசாயிகள் சம்மேளன பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு உரும்பிராய் திருக்குமரன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் அனைத்து விவசாயிகளும் கலந்துகொண்டு புதிய நிர்வாக சபைத் தெரிவில் பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

★★★

சுன்னாகம், ஒக். 18

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்தில் பழைய மாணவர்களைக் கலந்துகொண்டு பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆதரவு வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


உலக மார்பகப் புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் ஐப்பசி - 2017

மார்பகப் புற்றுநோய், பால் சுரப்புக் கலங்களிலோ பாலைக் கடத்தும் கான் கலங்களிலோ ஏற்படுகின்ற அசாதாரண கட்டுப்பாடற்ற கலப்பிரிவால் ஏற்படும் கட்டிகள் காரணமாக ஏற்படுகின்றது.




தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.


## நாளை

19.10.2017
வியாழக்கிழமை

நட்சத்திரம் : அத்தம் மு.ப. 8.18 வரை
திதி : அமாவாசை பி.இ. 12.43 வரை
சுபநேரம் : 7.32 - 9.02 வரை
இராகுகாலம்: 1.32 - 3.02 வரை

# வடக்கில் கடற்படையின் நடவடிக்கைகள் பத்து மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளன!

## கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 18

கடந்த இரண்டு மாதங்களில், வடக்கில் கடற்படையின் நடவடிக்கைகள் பத்து மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன என இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா தெரிவித்துள்ளார்.

கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னர், கடந்த இரண்டு மாதங்களில் வடக்கில் கடற்படையின் நிலைப்படுத்தல் முறைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

கடற்படையினரின் நடவடிக்கைகள் அங்கு பத்து மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஏனைய பகுதிகளில் இருந்து எமது படகுகளை எடுத்து, எல்லையில் குவித்துள்ளோம். வடக்கில் பயன்படுத்தப்படும் படகுகளின் வகையிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதிவேகத் தாக்குதல் படகுகளுக்குப் பதிலாக, அதிவேகப் பீரங்கிப் படகுகளை நிறுத்தியுள்ளோம்.

இவை பெரிய மற்றும் கனமான அடித்தளங்களைக் கொண்டவை. இத்தகைய நடவடிக்கைகளுக்காகவே வடிவமைக்கப்பட்டவை.

எமது நடவடிக்கைகள் முன்னரைப் போல இரகசியமானவையாக இல்லை. வெளிப்படைத்தன்மையும், பார்க்கக் கூடியதாகவும் உள்ளன.

முன்னைய முறை தவறானது. போரின் போது வேண்டுமானால் இரகசிய முறைகளைக் கடைப்பிடிக்கலாம். போருக்குப் பின்னர் அவை அவசியமற்றவை.

நாங்கள் இலங்கையின் கடல் எல்லையில் இருக்கிறோம். சர்வதேச கடல் எல்லையைப் பாதுகாக்கும் எம்மை யாரும் அவதானிக்க வேண்டும்.

இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் வருகின்றமையைத் தடுப்பதற்கான அணுமுறையில் இது ஒரு பெரிய வித்தியாசம்.

கைது செய்து துன்புறுத்தும் முறைக்குப் பதிலாக, எச்சரித்து தடுக்கும் முறையை பயன்படுத்தும் முறைக்கு மாறியிருக்கிறது கடற்படை.

இலங்கை கடற்படை தனது உபாயத்தை மாற்றியதை அடுத்து தமிழ்நாட்டு மீனவர்கள் கடல் எல்லைக்குள் வருவதைக் குறைத்துக் கொண்டு கேரளா, ஆந்திர கடல்பகுதியை நோக்கிச் செல்கின்றனர்.

இது எமது திட்டம் 100 வீதம் வெற்றியடைந்துள்ளதைக் காட்டுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## பங்களாதேஷ் பாதுகாப்பு ஆலோசகர் இராணுவ தளபதியுடன் சந்திப்பு!

பங்களாதேஷின் இலங்கைக்கான பாதுகாப்பு ஆலோசகர் கொமடோர் சிவிட் மக்சுமுள் ஹகீம் இராணுவ தளபதி லெப்டினண்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கவை சந்தித்துள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த உத்தியோகபூர்வமான சந்திப்பின்போது இருவருக்கும் இடையில் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

## கனடா அரசு களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்ட வைத்தியசாலைகளுக்கு நன்கொடை!



கொழும்பு, ஒக். 18

கனடா அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் குடியகல்வு சர்வதேச அமைப்பால் களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்ட வைத்தியசாலைகளுக்கு எட்டு நோயாளர்களின் சிகிச்சை தொடர்பான அவதானிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான நிகழ்வு சுகாதார அமைச்சில் இடம் பெற்றுள்ளது.

இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் டேவிட் மக்னோன் 25 லட்சம் ருபா நன்கொடையை சுகாதர போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரத்னவிடம் வழங்கினார்.

## தென்மேற்கு பிரதேசத்தில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை மாறலாம்!

### வளி மண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 18

நாட்டின் தென்மேற்கு பிரதேசத்தில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை தணியக்கூடும் என்று வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கருமேகக் கூட்டம் தொடர்ந்து காணப்படக் கூடும். அத்துடன், ஓரளவு கடும் காற்றும் வீசக் கூடும் என்று திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள் ளவை வருமாறு:-

மேற்கு சப்ரகமுவ , வடமேற்கு மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களில் சுமார் 75 தொடக்கம் 100 மில்லிமீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும்.

இடியுடன்கூடிய மழையின் போது தற்காலிகமாக இப்பிரதேசங்களில் காற்று வீசக் கூடும். இடி, மின்னல் தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும்.

இதேவேளை, வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை 19 ஆம் திகதி புயலாக மாற வாய்ப்புள்ளது என சென்னை வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்போது தமிழக கடற் கரையோர மாவட்டங்களில் அதிக மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. வங்க கடல் பகுதியில் நிலவி வரும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் பல மாவட்டங்களில் தொடர் மழை பெய்து வருகிறது. இந்த வருடம் ஜூன் முதல் செப்ரெம்பர் வரையிலான தென்மேற்கு பருவமழை காலத்தில் தமிழகத்தில் இயல்பைவிட 29 சதவீதம் அதிகளவில் மழை பதிவாகியுள்ளது.

இதனால் பெரும்பாலான பகுதிகளில் நீர் நிலைகளில் தண்ணீர் நிரம்பியுள்ளது. இருப்பினும் ஓடை, கால்வாய் மற்றும் ஏரி, குளங்களை சரிவர அரசு தூர்வாராதது, நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு காரணங்களால் அதிக மழை பெய்தும் நிலத்தடி நீர் எதிர்பார்த்த அளவுக்கு உயரவில்லை.

இன்னும் சில நாள்களில் வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையும் இயல்பைவிட 111 சதவீதம் அதிகம் மழை எதிர்பார்ப்பதாக வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (க)

## ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் றோயல் கல்லூரியின் பரிசளிப்பு விழா!




கொழும்பு றோயல் கல்லூரியின் 165 ஆவது பரிசளிப்பு விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வில் ஜனாதிபதி உரையாற்றுகையில்-

பிள்ளைகளை பரீட்சைகளுக்கு தயார்ப்படுத்துவதுடன், பரீட்சை பெறுபேறுகள் வந்தவுடன் சில பெற்றோர் பிள்ளைகள் மீது பிரயோகிக்கும் மோசமான பண்பற்ற பிரதிபலிப்பு தொடர்பில் பெற்றோரை தெளிவுபடுத்தும் செயற்திட்டம் பாடசாலை மட்டத்தில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை உள்ளிட்ட பல சந்தர்ப்பங்களில் நாட்டில் ஏற்படும் அவ்வாறான பல சம்பவங்களை நினைவூட்டிய ஜனாதிபதி, போட்டி மனப் பாங்கு இன்றி பிள்ளைகளின் உள்ளம், உணர்வுகள் விடயத்தில் கவனம் செலுத்துவது தொடர்பிலும் பெற்றோரைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்.

போதைப்பொருள், தொழில்நுட்பத்தின் மோசமான பக்கம் போன்றவை இன்று ஒழுக்கம், நன்னடத்தை மற்றும் பண்பான சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் பெரிய சவாலாக இருக்கின்றன எனத் தெரிவித்த ஜனாதிபதி, அவை தொடர்பில் அனைத்து பெற்றோரும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

கல்லூரிக்கு வருகைதந்த ஜனாதிபதி, மாணவர்களால் உற்சாகமாக வரவேற்கப் பட்டார். திறமை காட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை ஜனாதிபதி வழங்கினார்.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான அகிலவிராஜ் காரியவசம், கயந்த கருணாதிலக்க, ரவூப் ஹக்கீம், பைசர் முஸ்தபா, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பா.உ. ஹர்ஷண ராஜகருணா, அதிபர் பீ.ஏ.அபேரத்ன, ஆசிரியர்கள் பெற்றோர், பழைய மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# தமிழர்களின் அடையாளம் அழியாமல் இருப்பதற்கு செயற்பட வேண்டியவர்கள் தமிழ்த் தலைவர்களே!

## தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் செயலாளர் கமலதாஸ் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, ஒக். 18

இனவாதப் போக்குகளின் மூலம் தமிழினத்தின் அடையாளம், தனித்துவம், நிலப் பரப்புகள் என்பன அழிந்து விடாமல் இருப்பதற்காக செயற்பட வேண்டியது தமிழ் மக்களது தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களது வரலாற்றுப் பொறுப்பாகும் என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் செயலாளர் வி.கமலதாஸ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களைத் தரமுயர்த்துதல் மற்றும் புதிதாக ஸ்தாபித்தல் தொடர்பான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளல் என்கின்ற மட்டக்களப்பு மாவட்ட பதில் அரச அதிபரினால் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களைத் தரமுயர்த்துதல் மற்றும் புதிதாக ஸ்தாபித்தல் தொடர்பான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளல் என்கின்ற அறிவித்தல் பத்திரிகைகள் மூலமாக மட்டக்களப்பு பதில் அரச அதிபரினால் வெளியிடப்பட்டுள்ளது.

இது பற்றிய அபிப்பிராயங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னரும், புதிய கருத்துக்களை எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னரும் அரச அதிபருக்கு தபால், மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது தொலைநகல் மூலமாகவோ அனுப்ப முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, எமது மாவட்டத்தின் அனைத்துப் புத்திஜீவிகள், பொதுமன்றங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசியல் அமைப்புகள் இது தொடர்பான நடவடிக்கைகளில் இறங்குமாறு எமது கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்.

யுத்த காலங்களில் எங்களுடைய இனத்திற்கான நிர்வாக சேவைகளை ஒழுங்கமைப்பதற்காக ஆளும் அரசுடன் சேர்ந்து பல முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவுகள் உருவாக்கப்பட்டன. 12 பிரதேச செயலகப் பிரிவுகள் 14 ஆக மாற்றப்பட்டன. ஆனால் உள்ளூராட்சி மன்றங்கள் 12 ஆகவே இருந்து வருகின்றன.

தற்போது கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) பிரதேச செயலாளர் பிரிவில் மட்டக்களப்பு, கொழும்பு பிரதான வீதி வழியாக நாவலடி சந்தியில் இருந்து வெலிகந்த வரை விஸ்தரிக்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசங்களில் திட்டமிட்ட வகையில் முஸ்லிம் ஆக்கிரமிப்புகளும் இடம்பெறுகின்றன. விவசாய நிலங்களும், நீர் நிலைகளும் இரகசியமாக கபளீகரம் செய்யப்படுகின்றன.

அதேவேளை கோறளைப் பற்று வடக்கு (வாகரை) பிரதேசத்திற்குச் சொந்தமான புணாணை, ரிதிதென்ன போன்ற பிரதேசங்கள் புதியதொரு பிரதேச சபை அமைப்பதற்காக அபகரிக்கப்படுகின்றன.

இந்த விடயங்களை கவனிக்காமல் இருப்பதற்காக சமூக மட்ட நிறுவனங்களின் தலைவர்கள் கையூட்டுபெறும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. இவற்றை எதிர்க்க முற்படுபவர்கள் சில அதிகாரிகளாலும், சில அரசியல்வாதிகளாலும் மிரட்டப்படுகின்றார்கள்.

காணி விடயங்கள் தொடர்பாக எதிர்ப்பு வெளியிடும் பிரதேச செயலாளர்களை மாவட்டத்தில் இருந்து நீக்கிவிட்டு செங்கலடி, கிரான், வாகரை போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதிகளவான நிலப்பரப்புகளை மகாவலி அதிகாரசபை ஆக்கிரமிக்கின்றது.

குறிப்பாகசொல்லப்போனால் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம் 93 வீதமான நிலப்பரப்பு இன்று மகாவலி அதிகார சபையின் கீழ் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இனவாதப் போக்குகளின் மூலம் தமிழினத்தின் அடையாளம், தனித்துவம், நிலப் பரப்புகள் என்பன அழிந்து விடாமல் இருப்பதற்காக ஒன்று கூடிச் செயற்பட வேண்டியது தமிழ் மக்களது தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களது வரலாற்றுப் பொறுப்பாகும்.

அதேவேளை, தமிழ் சமூகத்தின் அரசியற்பலம் இன்னும் அதிகரிப்பதற்காகப் புதிய உள்ளூராட்சிசபைகளை முன்மொழிய வேண்டியதும் தமிழ் புத்திஜீவிகள், மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்களின் கடமையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொலிஸாரின் அர்ப்பணிப்பான சேவைக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### மட்டு. மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் யட்டவர கூறுகிறார்

சிவில் சமூக இயல்பு வாழ்க்கையைசீர்குலையாமல் பாதுகாப்பதில் பொலிஸார்மேற்கொள்ளும் அர்ப்பணிப்புக்களுக்கு பொதுமக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் யட்டவர தெரிவித் துள்ளார்.

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் நிலையத்தின் அரையாண்டுப் பொலிஸ் பரிசோதனை வவுணதீவு பொலிஸ் வளாகத்தில் நேற்றைய தினம் இடம் பெற்றது.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.ரி.நஸீர் தலைமையில் பொலிஸ் வளாகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் யட்டவர பரிசோதனைகளை ஏற்றுக்கொண்டதுடன், அணிவகுப்பு மரியாதையையும் ஏற்றுக்கொண்டார்.

இதன்போது பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்கள், துப்பாக்கிகள் என்பனவற்றின் தராதரம் மற்றும் பராமரிப்பு என்பன பரிசீலிக்கப்பட்டதுடன் பொலிஸாரின் ஆளுமைத் தோற்றம், ஆரோக்கியம் உட்பட அவர்களது நலன்களும் கருத்திற் கொள்ளப்பட்டன.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

24 மணிநேரமும் மக் களுக்குச் சேவை செய்யும் அர்ப்பணிப்பில் ஈடுபட்டுள்ள பொலிஸார் சிறந்த முன்மாதிரிகளைக் கடைப்பிடிப்பவர்களாக இருப்பதன் மூலம் சமூகத்தைச் சிறப்பாக வழி நடத்த முடியும்.

இந்த சந்தர்ப்பத்தில் பொலிஸ், பொதுமக்கள் உறவு என்பது மிகவும் மதிப்புக்குரியதாக இருக்க வேண்டும்.

அதேவேளை, சிவில் சமூக இயல்பு வாழ்க்கையை சீர்குலையாமல் பாதுகாப்பதில் பொலிஸார் மேற்கொள்ளும் அர்ப்பணிப்புக்களுக்குப் பொது மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தெங்கு உற்பத்தியை விரிவுபடுத்த நடவடிக்கை!




தேசிய ரீதியில் தேங்காய்க்கு அதிகளவிலான கேள்வி தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்தநிலை எதிர் காலத்திலும் தொடரக் கூடும் . எனவே வவுணதீவு பிரதேசத்தில் தெங்கு உற்பத்தியை மேலும் விரிவு படுத்த வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மண்முனை மேற்கு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மண்முனை மேற்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், பிரதேசத்தின் தெங்கு அபிவிருத்தி தொடர்பில் ஆராயப்பட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுணதீவுப் பகுதியில் தென்னந் தோட்டங்கள் செய்யக்கூடிய பிரதேசங்களையும்கிராமங்களையும் இனங்கண்டு அதில் தனியாரை இணைத்துக் கொண்டு அவர்களை ஊக்குவிப்பதன் மூலம் எதிர்காலத்தில் எமது பிரதேசத்திற்குத் தேவையான தேங்காய்களை ஓரளவேனும் பூர்த்தி செய்ய முடியும்.

1978 சூறாவளிக்கு முன்னர் இப் பிரதேசத்தில் ஏராளமான தென்னந் தோப்புகள் இருந்தன அந்தக் காலகட்டத் தில் பல தோப்புகள் அழிவடைந்தன. ஆனால் அதனைஇன்னும் எவரும் ஈடுசெய்யவில்லை.

மட்டக்களப்பில் தெங்கு உற்பத்தி பிராந்திய நிலையம் அமைந்துள்ளதால் மேற்படி திட்டத்தை மேற்கொள்வதும் அதுதொடர்பில் ஆலோசனைகளைப் பெறுவதும் இலகுவாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழு அறிவிப்புத் தொடர்பாக ஆட்சேபம்!

*மட்டக்களப்பு,ஒக்.18*

*மாகாணசபைகள் எல்லை நிர்ணயக் குழுவின் செயலாளரால் 2017.10.13 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பான தமது ஆட்சேபனைகளைத் தெரிவித்துக் கொள்வதாக ஏறாவூர் வலுவூட்டல் மற்றும் அபிவிருத் திக்கான மனித சேவைகள் நிறுவனம் 'ஷெட்' அறிவித்துள்ளது.*

## பேத்தாளை கருங்காலிச்சோலையில் மட்பாண்ட கைப்பணி வியாபார நிலையம்!

மட்டக்களப்பு, ஒக். 18

மட்டக்களப்பு மவாவட்டத்தில் பேத்தாளை கருங்காலிச்சோலையில் தேசிய அருங்கலை பேரவையின் மட்பாண்ட கைப்பணி வியாபார நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தேசிய அருங்கலை பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் பொன்.குவேதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதிய மைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன் போது உபகரணங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் இருபத்தி நான்கு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட வியாபார நிலையமும்திறந்துவைக்கப்பட்டதுடன், களி மண் பிசையும் இயந்திரம் மற்றும் பதினைந்து பேருக்கு சக்கப் போர்உபகரணமும்வழங்கப்பட்டன.

வாழைச்சேனை பேத்தாளை பெண்கள் தலைமை தாங்கும் குடும்ப பெண்கள் மற்றும் வறிய யுவதிகளின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும்வகையில்கைப்பணி நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

# கைதிகளுக்கான சிறப்பு வசதிகளுடன் சர்வதேச தரத்திலான சிறைச்சாலை திறப்பு!

கொழும்பு, ஒக். 18

கைதிகளுக்கான சிறப்பு வசதிகளைக் கொண்ட சர்வதேச தர நியமங்களுக்கேற்ப கட்டப்பட்ட இலங்கையின் முதல் சிறைச்சாலை நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள அங்குணுகொலபெலஸ்ஸவில் இந்தச் சிறைச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இதனை இலங்கையின் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நேற்றுமுன்தினம் திறந்து வைத்தார்.


சுமார் 450 கோடி ரூபா செலவில் கட்டப்பட்டுள்ள இந்தச் சிறைச்சாலையில் 1,500 கைதிகளை அடைத்து வைக்கும் வசதிகள் உள்ளன.


65 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்தச் சிறைச்சாலையில், மருத்துவனை, நீச்சல் தடாகம், விளையாட்டு மைதானம், தொழிற்பயிற்சிக் கூடம், கைத்தொழில் பிரிவு, உடற்பயிற்சிக் கூடம், உணவகம், உணவுக் கூடம், விருந்தினர் அறைகள் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன.



அம்பாந்தோட்டை அங்குணுகொல பெலஸ்ஸவில்







தங்காலை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகள், இந்தச் சிறைச்சாலைக்கு மாற்றப்படவுள்ளனர்.

180 கைதிகளை அடைத்துவைக்கும் வசதி கொண்ட தங்காலை சிறையில் தற்போது 1,200 கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச்சிறைச்சாலையை திறந்து வைக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பு விடப்பட்டது. எனினும் அவர் அந்த அழைப்பை நிராகரித்தமையால், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் இதனைத் திறந்து வைத்துள்ளார்.

### பதவிக்காலம் நிறைவடைந்துள்ள

## மாகாண சபைகளின் நிலைகுறித்து மைத்தரி தலைமையில் ஆராய்வு



பதவிக்காலம் நிறைவடைந்துள்ள மாகாண சபைகளின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது பதவிக்காலம் நிறைவடைந்துள்ள போதும் மாகாண சபைகளினூடாக வழங்கப்படும் பொதுமக்களுக்கான சேவைகளையும் நாளாந்த நடவடிக்கைகளையும் எவ்வித பாதிப்புமின்றி தொடர்ச்சியாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மாகாணங்களின் பிரதம செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தற்போது பதவிக் காலம் நிறைவடைந்துள்ள வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து இதன்போது ஜனாதிபதி விசாரித்து அறிந்துகொண்டார்.

அத்துடன், மாகாண சபைகளுக்கு வழங்கப் பட்டுள்ள செயற்பாடுகளை வேறு நிறுவனங்கள் கட்டுப்படுத்துவதற்கு இடமளிக்க வேண்டாம் என்றும் அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, மாகாணசபைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளைப் பயனுள்ள விதத்தில் செலவு செய்யவேண்டும் என்றும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த மாகாணங்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி உதவிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் குறித்து விசேட அவதானத்துடன் செயற்படுமாறும் அச்செயற்றிட்டங்களினைத்திறனான முறையில் முன்நோக்கிக் கொண்டு செல்லவும் ஜனாதிபதி ஆலோசனைவழங்கியதுடன் அவை அனைத்து நடவடிக்கைகளையும் மாகாண ஆளுநரின் ஆலோசனைகளுக்கேற்ப மேற்கொள்ளுமாறும் குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் அமைச்சர் பைசர் முஸ்தபா, மாகாண ஆளுநர்கள், ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## முதலாவது அரசியல் பேச்சுக்களை பாகிஸ்தானுடன் நடத்துகிறது மைத்திரி அரசு!

கொழும்பு, ஒக். 18

பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலர் தெஹ்மினா ஜன்ஜூவா நேற்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இலங்கை - பாகிஸ்தான் இடையிலான ஐந்தாவது சுற்று அரசியல் கலந்துரையாடல்களில் பங்கேற்கவே இவர் கொழும்பு வந்துள்ளார்.

நான்காவது சுற்றுப் பேச்சுக்கள், 2014ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இஸ்லாமாபாத்தில் இடம்பெற்றது. கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் ஐந்தாவது சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன.

இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் பாகிஸ்தானுடன் இடம்பெறும் முதலாவது அரசியல் கலந்துரையாடல் இதுவாகும்.

இந்தப் பயணத்தின் போது, இருதரப்பு உறவுகள், பரஸ்பர நலன்களை அடிப்படையாகக் கொண்ட பிராந்திய மற்றும் அனைத்துலக விவகாரங்கள், குறித்து இலங்கை அரசுடன், பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலர் ஆழமான பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இரண்டு நாள்கள் கொழும்பில் தங்கியிருக்கும் பாகிஸ்தான் வெளிவிவகாரச்செயலர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோரையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

## வித்தியா கொலைக் குற்றவாளிகள் வெவ்வேறு சிறைகளுக்கு மாற்றம்!

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏழு பேரும், மூன்று வெவ்வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

வித்தியா படுகொலை வழக்கில் சிறப்பு தீர்ப்பாயத்தினால் கடந்த மாதம் 27ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏழு பேர் உடனடியாக, போகம்பர சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.

ஒரே சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஏழு குற்றவாளிகளும், பாதுகாப்புக் காரணங்களுக்காக வெவ்வேறு சிறைச்சாலைகளுக்கு நேற்றுமுன்தினம் மாற்றப்பட்டனர்.

இவர்களில் இருவர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கும், இருவர் மகர சிறைச்சாலைக்கும் மாற்றப்பட்டுள்ளனர். மூன்று பேர் தொடர்ந்தும், போகம்பர சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஒரே குற்றத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரையும் ஒரே இடத்தில் சிறை வைத்திருப்பதில் உள்ள பாதுகாப்புப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு இந்த மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.



இந்த மாற்றங்கள் குற்றவாளிகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இந்திய மீனவர்கள் 8 பேர் கைது!



இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 8 பேர் மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனுஷ்கோடி - மன்னார் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரத்தை சேர்ந்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களிடமிருந்து ஒரு மீன்பிடிப் படகு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்கள் மன்னார் நீரியல் வளதிணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

# சிங்கள இனம் சமாதான கரங்களை புறக்கணித்தால் தமிழ் மக்கள் தனித்து நிற்கும் சூழல் உருவாகும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 18

பெரும்பான்மையான சிங்கள இனம் எமது சமாதான கரங்களை புறக்கணித்தால் தமிழ் மக்கள் தனித்து நின்று போராட வேண்டிய சூழ்நிலை மீண்டும் உருவாகும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் தெரிவித்துள்ளார்.

தமிழ் இனத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக போராடிய மாவீரர்களது தியாகங்கள் என்றுமே வீண்போகாது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சிலாவத்தை இளம் பறவை விளையாட்டுக் கழகம் நேற்றுமுன்தினம் நடத்திய உதைப்பந்தாட்டப் போட்டி நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் இனம் ஒடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் பேரவலத்திலிருந்து தமிழ் மக்கள் மீண்டெழுவார்களா எனும் சந்தேகம் காணப்பட்டதாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், தற்போது உருவாக்கப்பட்டு வரும் புதிய அரசமைப்பில் வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணம் உள்ளிட்ட தமிழ் மக்களுக்கான அதிகாரங்கள் அனைத்தும் தீர்வாகக் கிடைக்கப் பெறுமா என்ற கேள்விக்குறியுடன் செயற்பட வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

## தினசரி ராசி பலன் 18.10.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஐப்பசித் திங்கள் 2 ஆம் நாள் புதன்கிழமை. சதுர்த்தசித் திதி இரவு 12.13 மணிவரை. பின்னர் அமாவாசை. நட்சத்திரம் உத்தரம் காலை 6.38 மணிவரை. பின்னர் அத்தம். அமிர்தசித்தாமிர்தயோகம் முழுவதும். இன்று தீபாவளிப் பண்டிகை

**ராகுகாலம்** - பகல் 11.55 மணிமுதல் 1.24 மணிவரை.

**சுபநேரம்** - மாலை 4.32 மணிமுதல் 6.03 மணிவரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி**- ஐப்பசி மாத தேய்பிறை சதுர்த்தசி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** உத்தரம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** இனிமையான நாள். பணவரவு திருப்தியைத் தரும். வியாபாரத்தில் புதுவாடிக்கையாளர்கள் வருகையால் உற்சாகமடைவார்கள். புண்ணியத் தலங்கள் சென்றுவருவார்கள்.

**ரிஷபம் :** இன்பமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வியாபாரத்தில் கணிசமான லாபம் கிடைக்கும். உறவினரின் திடீர் வருகையால் வீடு கலகலப்பாக இருக்கும். பூர்வீக சொத்து கைக்கு வந்து சேரும்.

**மிதுனம்:** கவலையான நாள். பொருளாதாரம் சரிவடையும். உத்தியோகத்தில் ஓய்வில்லாத கடின உழைப்பு இருக்கும். மாணவர்கள் கல்வித் தேர்வில் தோல்வி அடைவார்கள்.

**கடகம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகளால் திண்டாடுவார்கள். எதிர்பாராத பயணங்கள் உண்டாகும்.

**சிம்மம்:** மேன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். நினைத்த காரியம் வெற்றியடையும். உத்தியோக மேன்மை உண்டாகும். பிள்ளைகளால் பெருமையும், மகிழ்ச்சியும் உண்டாகும்.

**கன்னி :** யோகமான நாள். தனலாபம் பெருகும். இவர்கள் கௌரவம் மேலோங்கும். பலநாள் ஆசை நிறைவேறும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். திருமணயோகம் உண்டாகும்.

**துலாம்:** அலைச்சல் மிகுந்த நாள். உத்தியோக ரீதியான அலைச்சல்கள் அதிகரிக்கும். உடலில் ரோகங்கள் உண்டாகி, வைத்தியரின் உதவியை நாடுவார்கள். சிலர் தொழில் இடமாற்றத்தால் வாடகை வீடு தேடுவர்.

**விருச்சிகம்:** சுபீட்சமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரித்து சுபீட்சம் உண்டாகும். மகனுக்கு நல்ல வேலை கிடைக்கும். மாணவர்கள் பாராட்டைப் பெறுவர்.

**தனுசு :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். தேகசுகம், குடும்பநலம் ஓரளவு சீராக இருக்கும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும்.

**மகரம் :** உயர்வான நாள். வருமானம் உயரும். வியாபாரம் நன்கு விருத்தியடையும். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி காணப்படும். சிலருக்கு கௌரவப் பதவிகள் தேடிவரும்.

**கும்பம்:** கவலையான நாள். பொருளாதாரம் நலிவடையும். வியாபாரத்தில் பொருள்கள் தேங்கிக் கிடக்கும். உத்தியோகத்தில் கவனக்குறைவால் அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரும்.

**மீனம் :** சலனம் மிகுந்த நாள். எந்த விடயத்திலும் சரியான முடிவு எடுக்க முடியாமல் குழம்புவார்கள். மாணவர்களுக்கு கல்வித்தடை உண்டாகும். வேலை பார்க்கும் பெண்களுக்கு இடைஞ்சல் வரும்.

சந்திராட்டமநாள்: அவிட்டம், சதயம், பூரட்டாதி 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்த அனீகா விஜயசூரியவுக்கு மரண அச்சுறுத்தல்!

சர்ச்சைக்குரிய மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பாக சாட்சியமளித்த அனீகா விஜயசூரியவிற்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் தெரிவித்துள்ளது.

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் நெருங்கிய ஒருவராலேயே இந்த மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனால், அவர் தற்பொழுது நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என சட்டமா அதிபர் திணைக்களம் பிணைமுறி மோசடி தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் தெரிவித்துள்ளது.

பேர்ப்பசுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் ஆலோசியஸினால் 116 லட்சம் பெறுமதியான வீடொன்றை வாடகைக்கு வழங்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அனீகா விஜயசூரிய ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகி சாட்சியமளித்ததைத் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு பதவி விலக நேரிட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். ஒஸ்மானியா கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் கல்விக் கண்காட்சி நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் விஞ்ஞான ஆய்வு கூடத்தில் அதிபர் எம்.சேகு ராஜிது தலைமையில் நடைபெறும்.

பிரதம அதிதியாக யாழ். கல்வி வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் த.கதிர்காமநாதன் கலந்து கொள்வார்.

விஞ்ஞான செயன்முறைகள், விஞ்ஞானஎண்ணக்கருக்கள், விஞ்ஞான புத்தாக்கங்கள், பொது அறிவு சூழல்சார் முகாமைத்துவம், சக்திவள விழிப்புணர்வு என்பவற்றுடன்பாடகண்காட்சிப்பொருள்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகளை அழைக்கின்றனர் பாடசாலை சமூகத்தினர். (இ - 19)

# யாழ். வைத்தீஸ்வராவில் நாளை முத்தமிழ் விழா, சஞ்சிகை வெளியீடு

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் முத்தமிழ் விழாவும் சஞ்சிகை வெளியீடும் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, கௌரவ விருந்தினராக இலங்கை வங்கியின் ஓய்வுநிலை முகாமையாளரும் பழைய மாணவருமான கு.ஜெயம் ஆகியோர் கலந்துகொள்வர்.

'தமிழ் அலைகள்' சஞ்சிகை வெளியீட்டுடன் மாணவர்களின் குழுஇசை, கவியரங்கம், வாத்திய பிருந்தா, பட்டிமன்றம், தில்லானா, சகுந்தலம் நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ - 19)

# செல்வச்சந்நிதி தேர்முட்டி அடிக்கல் நடும் விழா

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் புதிய தேர்முட்டிக்கான அடிக்கல் நடும் விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (இ)

# கைதடி நுணாவில் பகுதிக்கான உரமானியத்துக்கான பதிவுகள்

## நாளையும் நாளைமறுதினமும்

கைதடி, ஒக். 18

கைதடி நுணாவில் கமக்கார அமைப்புக்குட்பட்ட பிரதேசத்தில் விவசாயத்தில் ஈடுபடும் மக்களுக்கான உரமானியத்துக்கான பதிவுகள் நாளை வியாழனும், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையும் -

கைதடி விவசாயத்திணைக்களத்தில் (ஏ.பி.சி.) காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை இடம்பெறும்.

ஏற்கனவே விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள்-

தேசிய அடையாளஅட்டை, விவசாய சம்மேளன சந்தாப் பணச்சிட்டை, அரசாங்க வங்கிப் புத்தகத்தின் முதல் பக்கம் போன்றவற்றின் போட்டோ பிரதிகளைக் கொண்டு வர வேண்டும்.

புதிதாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் -

தேசிய அடையாள அட்டை, விவசாய சம்மேளன சந்தாப் பணச்சிட்டை, அரசாங்க வங்கிப் புத்தகத்தின் முதல் பக்கம், விவசாய காணி உறுதி போன்றவற்றின் போட்டோப் பிரதிகளுடன், கடவுச் சீட்டுக்குப் பயன்படும் 3 படங்கள் மற்றும் 5 புகைப்படங்களுடன் சமுகம் தரவேண்டும் என்று கைதடி நுணாவில் கமக்கார அமைப்பின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 18

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5.30 மணிவரை -

**வவுனியா பிரதேசத்தில்** - சாளம்பைக் குளம் பிரதேசத்திலும் -

**மன்னார் பிரதேசத்தில்** - திருக்கேதீஸ்வரம் பிரதேசத்திலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம். துவாரகன் அறிவித்துள்ளார்.

# தீபாவளித் திருநாள் சிறப்பிதழ்

## நாட்டில் ஐக்கியமாக சமாதானத்துடன் வாழ தீபாவளித் திருநாள் வகை செய்திட வேண்டும்

### வாழ்த்துச் செய்தியில் சம்பந்தன்



அனைத்து மக்களும் இனமதவேறுபாடுகளின்றி ஒருமித்த நாட்டில் ஐக்கியமாக சாந்தி, சமாதானத்துடன் வாழ இத் தீபாவளித் திருநாள் வகை செய்திடவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைஇறைஞ்சி, அனைவருக்கும் எனது தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தமது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் செய்தியில் -

உலகுக்கு ஒளி தருபவை இரண்டு கோள்கள். ஒன்று கதிரவன், மற்றொன்று சந்திரன். இவற்றைவிட மனிதர்களால் செயற்கையாக ஏற்றப்படும் விளக்குகளும் இருளை விலக்கி ஒளியைத் தருகின்றன. விளக்கு என்பதை தீபம் என்றும் அழைப்பர். இத் தீபங்களை வரிசையாக ஏற்றும்போது அதனை ஆவளி (வரிசை) என்று கூறுவர். எனவே, தீபங்களைவரிசைவரிசையாக அடுக்கி எண்ணெய் அல்லது நெய் விட்டு அவற்றைப் பிரகாசமாக ஒளிரவிடும்போது, அவை மக்கள் மனங்களில் இருளாக உள்ள கோபம், குரோதம், அகங்காரம், பொறாமை மற்றும் பிற தீய எண்ணங்களை அகற்றும் என்பது ஐதீகம்.

தீபாவளிப் பண்டிகை, இந்துக்களின் முக்கியமான பண்டிகைகளுள் ஒன்றாகும். இறைவனிடம் சக்தி பொருந்திய வரத்தைப் பெற்றுக் கொண்ட நரகாசுரன் என்னும் அரக்கன், மக்களுக்கும் தேவர்களுக்கும் துன்ப துயரங்களைச் செய்பவனாகவும், பெரும் அச்சுறுத்தலானவனாகவும் விளங்கினான். அவ்வாறு துன்பங்களைஅனுபவித்த தேவர்கள் அரக்கனிடமிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு இறைவனிடம் விடுத்த வேண்டுகோளுக்கமையவே அவன் இறைவனால் வதம் செய்யப்பட்டான். அரக்கனான நரகாசுரன் வதம் செய்யப்பட்ட தினத்தையே தீபாவளியாக இந்துக்களாகிய நாம் கொண்டாடுகின்றோம்.

இத்தீபாவளித் திருநாளானது ஐப்பசி மாதத்து அமாவாசைக்கு முன்தினமான சதுர்த்தசி அன்று கொண்டாடப்படுகின்றது. இவ்விழாவின் பொருட்டு எமது நாட்டில் மட்டுமல்ல, இந்தியா, நேபாளம், மியன்மார், சிங்கப்பூர், மலேசியா மற்றும் பிஜி போன்ற நாடுகளிலும் அரசு விடுமுறைத் தினமாகப் பிரகடனப் படுத்தியுள்ளமை இத் திருநாளின் சிறப்புக்குச் சான்றாகும்.

கடந்த காலங்களில் இடப்பெயர்வுகள், அகதி வாழ்க்கை, வாழ்வாதாரப் பிரச்சினைகள் போன்றவற்றால் துன்ப, துயரங்களை அனுபவித்து வந்த எமது மக்கள், அவற்றிலிருந்து விடுபட்டு சம அந்தஸ்துடன் கூடிய உரிமைகளுடன் வாழும் வகையில் இன்று முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கைகள் வெற்றிபெற வேண்டுமெனவும், அனைத்து மக்களும் இன, மத வேறுபாடுகளின்றி ஒருமித்த நாட்டில் ஐக்கியமாக சாந்தி, சமாதானத்துடன் வாழ இத்தீபாவளித் திருநாள் வகைசெய்திட வேண்டுமெனவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி, இந்நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி, உலகின் பல்வேறு நாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளுக்கும் எனது தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- என்றுள்ளது. (இ)

## நல்லதை நினைப்போம்; செய்வோம்!!

### ஆதீன குருமுதல்வர் அருளாசிச் செய்தி



தேனினும் இனிய தித்திப்பான வாழ்க்கைக்கு வழிகோலுகின்ற தீபாவளித் திருநாள் இன்றாகும். இந்தத் தீபாவளி தமிழ் மக்களின் இனிய கொண்டாட்டத்துக்கு கந்த நன்மை பலதரும் நல்லதொரு பெருநாளாகும். இன்றைய தீபாவளிப்பண்டிகைத் திருநாளில் நாம் எல் லோரும் காலை எழுந்து நீராடிப் புத்தாடையணிந்து தாய், தந்தையரை மனமார வணங்கி ஆசி பெற்றுக் கொள்ள வேண்டும்.

அத்துடன் -

பக்கத்திலிருக்கும் ஆலயம் ஒன்றுக்குச் சென்று இறையருளை வேண்டித் துதித்து நீறு தரித்து வணங்கிக்கொள்ளுதல் உத்தமம் இன்றைய நல்ல நாளில் நல்லதையே நினைத்து, நல்லதையே செய்து, நன்மை பற்றியே உரையாடி உறவினர்களின் இல்லங்களுக்குச் சென்று அவர்களுடன் மகிழ்ச்சி யுடன் உறவுகொண்டாடி இன்புற்றிருத்தல் வேண்டும்.

அந்த வகையில் இன்று மலர்ந்துள்ள தீபாவளி அனைத்து மக்களுக்கும் ஆனந்தத்தை அள்ளி வழங்கி இன்பவாழ்க்கையை நல்க வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அருளாசிகள் வழங்கி உளமார மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதெல்லால் வேறொன்றுமறியேன் பராபரமே'' என்றபடி இந்த இனிய தீபாவளி நன்னாளில் ஈழம்வாழ் மக்கள் அனைவரும் ஆனந்தம் நிறைந்த மங்கலகரமான நல்வாழ்க்கையில் திளைத்திருக்க ஆசி நல்கி மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

**- ஆதீன குருமுதல்வர்**
**நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.**







# தீபாவளித் திருநாள் சிறப்பிதழ்

## தென்னிலங்கை மத, அரசியல்வாதிகள் மனமாற்றம் பெற்றிட வேண்டும்

### தீபாவளிச் செய்தியில் வாசுதேவக்குருக்கள்



அனைவருக்கும் இனிய தீபாவளித் திருநாள் வாழ்த்துக்கள். தமிழினம் காலத்திற்குக் காலம் துன்பங்களையம் வேதனைகளையும் அனுபவித்துவந்திருக்கின்றது. அப்போதெல்லாம் அவற்றில் இருந்து சற்றேனும் மனம் ஆறுதல் அடைவதற்கு அவர்கள் கொண்டிருந்த பெரும் நம்பிக்கைகள் விரதங்களும் ஆலய மகோற்சவங்களும் பண்டிகைகளும் ஆகும். இவைகளும் காலத்திற்குக் காலம் வந்தாலும் கூட எம்மை இறைவன் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கை இவர்கள் வாழ்வை நகர்த்திச் செல்லுகின்றது.

இன்றைய சூழ்நிலையில் எங்கள் இனத்தின் அரசியல் கலாசார விழுமியங்கள் இளம் சமூகம் அரசியற்கைதிகள் விடுபடாத காணிகள் முதலானவைகள் குறித்த ஏக்கங்கள் அதிகமாக எழுந்துள்ளன. குறிப்பாக அரசியல் ஏமாற்றத்தைத் தருவதாக அமைந்துள்ளதை அனைவரும் உணர்ந்திருப்பதை காணமுடிகின்றது.

இன்றைய தீபாவளித்திருநாளில் தென்னிலங்கை மதத்தலைவர்கள் 'அரசியற் தலைவர்களது மனம் மாற்றம் அடைதல் வேண்டும். அப்பொழுது தான் எமக்குரிய காத்திரமான அரசியல் தீர்வு எம்மை வந்தடையும் என்பது நிதர்சனம். மதத்தலைவர்களை முன்னிலைப்படுத்தி தென்னிலங்கை அரசியலை நடத்தும் அரசியல்வாதிகளது மனம் மாற்றம் பெற வேண்டும். இன்றையதீபாவளிஎமது இனத்திற்கு நிரந்தர அரசியல் தீர்வையும், சாந்தியையும் மகிழ்ச்சியையும் தர வேண்டும். தமிழர்களது அபிலாசைகள் பூர்த்தியாகவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

- சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்.

## தமிழினம் இன்புற்று இறும்பூதெய்திட ஒரு தீபாவளி விரைவில் பிறக்கும்

### குமரகுருபரன் வாழ்த்துச் செய்தி



உளம் கனக்கின்றது அரசியற் கைதிகளின் , காலம் கடந்து போகும் விடுதலை. காணாமற்போனோர் தம் உறவுகள், ஆதரவற்ற உறவுகள் என தமிழ் மக்களுக்கு தீராத பிரச்சினைகள், எனினும் நிறைந்த இறை பக்தியுடன் வாழும் என் இனிய தமிழ் மக்களுக்கு எனது இனிய தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன் என தீபத்திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் பொதுச்செயலாளரும், தமிழ்த் தேசியப் பணிக்குழுவின் தலைவருமான முனைவர் நல்லையா குமரகுருபரன்.

அவரின் வாழ்த்துச் செய்தியில் –

இன்று எமக்கு இருக்கும் பிரச்சினைக்கும் உளவேதனைகளுக்கும் தீபாவளித் திருநாளின் அர்த்தத்திற்கும் கொண்டாடப்படும் காரணத்திற்கும் மிகவும் தொடர்பிருக்கின்றது . தொடர் துன்பியலின் விடுதலையில் துன்பம்கொடுத்த நரகாசுரன் உண்மையை உணர்ந்தநாள் அது தீபாவளித்திருநாள் .தீபங்களை ஆவளியாய் ஏற்றுவோம் லட்சுமிமகிழட்டும்துன்பங்கள்விலகிஓடட்டும்.

'தர்மத்தின் வாழ்வுதனை சூது கௌவும் தர்மம் மறுபடியும் வெல்லும் எனும் இயற்றகை மர்மத்தை நம்மாலே உலகம் கற்கும் வண்ணம் வழி தேடி விதி இந்த செய்கைசெய்தான் பொறுத்திருப்போம் காலம் மாறும் அப்போது தர்மத்தை வெல்லக்காண்போம் ' என்பது போல எல்லாம் தமிழனுக்குத்தான் . எத்துணை துன்பம் வந்தாலும் உலக அரங்கில் நமது நாகரிகத்தை இழந்துவிடாது காட்டுமிராண்டிகளாக மாறாது எமது உயர் நாகரிகத்தை பேணி நிற்போம் . அதுவே உலக அரங்கில் பெருமையைத் தேடித்தரவல்லது சாணக்கியத்தை பேசவல்லது.

துன்புற்றிருக்கும் என் தமிழினம் இன்புற்று இறும்பூதெய்திட ஒரு தீபாவளி விரைவில் பிறக்கும் பொறுத்திருப்போம் காலம் மாறும் அப்போது தர்மத்தை வெல்லக்காண்போம் – என்றுள்ளது. (இ)

### "தீர்வுதான் இனிய தீபாவளி"

புலமைப் பரீட்சை விடைபெறும் நாளே
புனிதமான எம் தீபாவளி
போதையிலிருந்து விடைபெறும் நாளே
பூமிக்கு உரிய தீபாவளி,
நிலமொடு இழந்த அத்தனையும் நாளை
நமக்குக் கிடைப்பதுதான் தீபாவளி,
நீடித்த தீர்வு கிடைக்கும் நாளே
நிம்மதியான இனிய தீபாவளி.

கே.எஸ்.சி.ராஜா.






## தீபாவளித் திருநாள் சிறப்பிதழ்

# தீமை அழித்து ஒழிக்கப்பட்டு நன்மை பிறந்த நாளே தீபாவளி!



தீபாவளியை தீ ஒளி என முன்னோர் குறிப்பிடுகிறார்கள். தீமை அகன்று நன்மை பிறக்கும் நன்னாள் என்கின்றனர். ஒளி என்பது வெற்றியின் அடையாளம். இருள் என்பது தோல்வியின் பொருள்

தீபாவளி பண்டிகை தீமையின் வடிவான அசுரர்களை கடவுளின் அவதாரம் அளித்ததால் உருவானது என்கின்றன இந்துப் புராணங்கள். நம்மில் பெரும்பாலானோருக்குத் தெரியும் நரகாசுரன் கதை. நரகாசுரனின் உண்மைப் பெயர் பவுமன். திருமால் வராக அவதாரம் எடுத்து பூமியை துளைத்து அசுரர்களை அழிக்கச்சென்ற போது, அவரின் ஸ்பரிசத்தால் பூமாதேவிக்குப் பிறந்தவன் நரகாசுரன்.

அசுரவதத்தின் போது பிறந்தவன் என்பதால் அசுரசுபாவம் இவனுக்கு இயல்பாக அமைந்துவிட்டது. நரன் என்றால் மனிதன். மனிதனாக இருந்தாலும், துர்க்குணங்கள் நிரம்பியவனாக இருந்ததால் நரகஅசுரன் எனப்பட்டான். அப்பெயரே நரகாசுரன் என்றானது.

இவன் தேவர்களுக்கும் மக்களுக்கும் பல்வேறு துன்பங்களைக் கொடுத்து வந்தான். இதை அறிந்த மகாவிஷ்ணு அவனைக் கொல்ல நினைத்தார். ஆனால் அவன் பூமி தாய்க்கு பிறந்தவன். அவன் தன் தாயை தவிர வேறு யாராலும் கொல்லப்பட முடியாத வரம் பெற்றிருந்தான்.

எனவே மகாவிஷ்ணு ஒரு தந்திரம் செய்தார். நரகாசுரனுடன் போரிட்டார். அவன் மகாவிஷ்ணு மீது அம்பு எய்தினான். இந்த அம்பு பட்டு அவர் மயக்கம் அடைவது போல் கீழே விழுந்தார். இதை பார்த்த சத்திய பாமா கோபம் அடைந்து நரகாசுரனை போருக்கு அழைத்தார். சத்திய பாமா பூமியின் அவதாரம் என்று உணராமல் அவரோடு நரகாசுரன் போர் செய்தான். அன்னையின் அம்புக்கு பலியாகி சரிந்தான். அப்போதுதான் அவனுக்கு சத்யபாமா தனது தாய் என்று தெரிந்தது.

அவரிடம் அம்மா, நான் மறைந்த இந்நாள் மக்கள் மனதில் நிற்க வேண்டும். என்னுடைய பிடியிலிருந்து விடுபட்ட தேவர்களும் மக்களும் இந்த நாளை இனிப்பு வழங்கி, ஒளிமயமாக கொண்டாட வேண்டும் என்று வேண்டினான். மகாவிஷ்ணுவும் சத்யபாமாவும் அவனுக்கு வரம் கொடுத்தார்கள். இதையொட்டி நரகாசுரன் மறைந்து மகிழ்ச்சி பொங்கிய நாள் தீபாவளி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. இதை கிருஷ்ண லீலை என்கிறது புராணம்.

வால்மீகி இராமாயணத்தில் இராமன் கொடியவனான இராவணனை அழித்துவிட்டு தனது வனவாசத்தை முடித்து கொண்டு மனைவி சீதையுடன் சகோதரன் லட்சுமணன் உடன் அயோத்திக்கு திரும்பிய நாளை மக்கள் விளக்கேற்றி வரவேற்றனர். அதன் தொடர்ச்சியாக தீபாவளி பிறந்தது என்றும் சொல்லப்படுகிறது.

இன்னொரு கதையும் உண்டு. ஸ்கந்த புராணத்தின் படி, சக்தியின் 21 நாள் கேதாரகௌரி விரதம் முடிந்து இந்தத் தினத்தில்தான். விரதம் முடிவடைந்த பின்னர் சிவன், சக்தியை தன்னில் ஒரு பாதியாக ஏற்று 'அர்த்தநாரீஸ்வரர்' உருவமெடுத்தார். இறைவன் ஜோதிவடிவாக நம்முள் இருக்கிறான். இந்த ஜோதி வடிவான இறைவனை வழிபடுவதற்கான சிறப்பு நாளே தீபாவளியாகும்.

தீப வழிபாடு தீபாவளி என நாம் கொள்ளலாம். மேலும் ஆணில் பெண் சரிபாதியாக இணையும் நன்னாளினை நினைவுபடுத்துவதாக தீபாவளி அமைந்ததாகக் கூறுகிறது ஸ்கந்தபுராணம்.

புராணங்கள் இப்படிச் சொல்ல, தீபாவளிப் பண்டிகை எப்போதிருந்து கடைப்பிடிக்கப்பட்டது? ஏன் கொண்டாடப்படுகிறது என்பது பற்றி வேறு சில விளக்கங்களும் சொல்லப்படுகின்றன.

கி.பி.ஆயிரத்து நூறாம் ஆண்டிலேயே தீபாவளி கொண்டாடும் பழக்கம் இந்தியாவில் இருந்திருப்பதாக சில வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. கி.பி. 1117இல் வாழ்ந்த சாளுக்கிய திரும்புவன மன்னன் ஆண்டு தோறும் சாத்யாயர் எனும் அறிஞருக்கு தீபாவளிப் பரிசு வழங்கியதாக கன்னடத்தில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. கி.பி.1250இல் எழுதப்பட்ட லீலாவதி எனும் மராத்தி நூலில் எண்ணெய் தேய்த்து நீராடுவதை பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

பொதுவாக ஐப்பசி மாதம் பனி நிறைந்த மாதம். இல்லம் தோறும் குளிர் அதிகமாக அண்டும் காலம். இருள் கூடும் காலம் என்றும் இதைக் கூறலாம். அந்தக் காலகட்டத்தில் ஒளியை பெருக்கி உஷ்ணத்தை வீடுகளில் உருவாக்க இந்தப் பண்டிகையை மக்கள் கடைப்பிடிக்க தொடங்கி இருக்கலாம் என்பது கரிசல் இலக்கிய எழுத்தாளர் கி.ராஜநாராயணன் கருத்து.

### எல்லோரும் கொண்டாடிய தீபாவளி

தீபாவளிப் பண்டிகையை இந்தியர்கள் மற்றும் இந்துக்களைத் தவிர பிற நாட்டவரும் பிற மதத்தவரும் கூடக் கொண்டாடும் பழக்கம் இருந்துள்ளது.

பழங்கால இந்திய மன்னர்கள் இந்துக்களாக இருந்தாலும் முகலாயர்களாக இருந்தாலும் தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களில் மக்களுக்கு பல சலுகைகளையும் பரிசுப் பொருள்களையும் அளிப்பதை வழக்கமாக வைத்திருந்தனர். அரசனின் தர்பாருக்குள் மக்கள் அனுமதிக்கப்பட்டு அடிப்படைத் தேவைகளுக்கு அடித்தளம் போட்டு தரும் நாளாக பண்டிகைகள் திகழ்ந்துள்ளன. முகாலய மன்னர்களில் சிலர் தீபாவளி போன்ற இந்துக்களின் பண்டிகைகளை ஆதரித்தனர் என்றும் பசியாக வந்தவர்களுக்கு விருந்து அளித்தனர் என்றும் வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.

தமிழ் மன்னர்கள் பண்டைய காலத்தில் ரோம், எகிப்து, பாபிலோன், கிரேக்கம், பாரசீகம் என பல உலக நாடுகளுடன் வர்த்தக தொடர்புகள் இருந்துள்ளன. இந்தியாவிலிருந்து வாசனை திரவியங்கள், மூலிகைகள், யானை தந்தங்கள் எடுத்துச் சென்றதாக வரலாறு கூறுகிறது. அந்த வணிக தொடர்பின் போது இந்தியாவிலிருந்து சென்ற பல வணிகர்கள் இடம்பெயர்ந்த நாட்டில் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடி உள்ளனர். ஆகவே பல தேசங்களுக்கும் பரவி உள்ளது தீபாவளி. சீக்கியர்களும்,சமணர்களும் கூட இப்பண்டிகையை வெவ்வேறு காரணங்களுக்காகக் கொண்டாடுகின்றனர்.

1577ஆம் ஆண்டு பொற்கோவில் கட்டுமானப் பணிகள் துவங்கிய தினம் என சீக்கியர்கள் தீபாவளியைக் கொண்டாடுகின்றனர். சமணர்கள், மகாவீரர் முக்தி அடைந்த நாள் என தீபாவளியைக் கொண்டாடுகின்றனர்.

இப்போது கூட இந்தியா மட்டுமின்றி, இலங்கை, நேபாளம், மியன்மார்,சிங்கப்பூர், மலேசியா, பிஜி, வங்கதேசம் உள்ளிட்ட நாடுகளிலும் இந்தப் பண்டிகையை மக்கள் கொண்டாடுகிறார்கள். ★

## 'மன இருள் நீங்கி தெளிவு பிறக்கட்டும்'



தீபாவளி... தீபம் + ஆவளி என்றால் வரிசை, தீபத்தினை எதற்காக ஏற்றுகிறோம்? தீபம் ஒளியைத் தருகிறது. அந்த ஒளி பரவுவதன் மூலம் இருள் விலகுகிறது. இருள் விலகுவதால் பாதை தெரிகிறது. தெளிவு பிறக்கிறது தீர்வு கிடைக்கிறது.

ஒளியானது என்னென்ன? அன்பு, பணிவு, பரிவு, கனிவு, ஆனந்தம் இவைகள் தான் ஒளி. இந்த நற்குணங்களை மனிதர்கள் தங்களுக்கு இடையே பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும். அப்படி செய்து கொண்டால் போதும் அந்த இடத்தில் பிரகாசம் வந்து விடும். மன இருள் நீங்கி தெளிவு பிறந்து விடும். அதைத்தான் இந்த தீபாவளி அன்று நாம் செய்ய வேண்டும். அனைவருக்கும் எனது தீபாவளி நல் வாழ்த்துகள் உரித்தாகட்டும்.

*'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'*

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்**
*இந்துமத குரு பீடாதிபதி*
*பிரதமகுரு வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில்*
*வல்வெட்டித்துறை.*

## தீபாவளியே நல்ல தீர்வு தர வருக! வருகவே!!



இன்று தீபாவளித் திருநாள் இந்து தமிழர்களின் பெருநாள். இன்று மலர்ந்துள்ள இந்த இனிய தீபாவளி தமிழர் தம் வாழ்வில் ஒரு நல்ல திருப்பத்தைத் தர வேண்டும். எல்லோரும் ஒருமித்து ஒருமனதாய் "ஒற்றுமையே பலம்'' என்பதற்கிணங்க ஒன்றாக வாழ ''தீபாவளியே நல்ல தீர்வு தர வருக!" என்று முழு மனதுடன் வரவேற்று இன்புற்றிருக்க வாழ்த்துகின்றோம்.

இன்றைய தீபாவளி நன்னாளில் மூத்தோர் ஆசிபெற்று சமாதானம் நிறைந்த நல்வாழ்வு மலர எல்லாம்வல்ல வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளைச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து மகிழ்ச்சியுடன் ஆசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

என்றும் எப்போதும் எந்நேரமும் சிரித்தமுகத்துடன் வந்தாரை வரவேற்று உபசரித்து நல்வாழ்விற் திளைக்க இனிப்புப் பண்டங்கள் பரிமாறி உற்றார், உறவினர், நண்பர்களுடன் மகிழ்ந்துரையாடி இன்புற்றிருக்க இறையருள் வேண்டிச் சிந்தை மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

*"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக*
*உலகமெல்லாம்"*

*நல்லை ஆதீன சமயப்பிரசாரகர்*
*''தெய்வத்தமிழ்ச் சுடர்''*
**இராசையா ஸ்ரீதரன்.**

## 'கொழும்பையும் எழுப்பும் தீபாவளி'

சுடுவெடி வேண்டாம் அடுப்படி உணவில்
சுகந்தம் மிளிரவேண்டும்,
சோக்கான ஆடை சாப்பாடு கூட
சுத்தமாக ஒளிர்வதே தீபாவளி,
கெடுபிடி எடுபிடி வேலைக ளெல்லாம்
கேவல மாகட்டும் தீபாவளியில்
கேப்பாபிலவுடன் கைதிகள் போராட்டம்
கொழும்பை எழுப்பும்பார் தீபாவளியில்

**கே.எஸ்.சிவஞானராஜா.**


அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த
இனிய தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்
உங்கள் எதிர்கால திட்டம் எதுவாயினும்
உங்கள் ஒளிமயமான வாழ்வுக்கு கைகொடுக்க நாம் தயார்......
* கல்வி
* வேலைவாய்ப்பு
* வெளிநாடு
WINSTAR CONSULTANTS
- சிறந்த உயர்தர கல்வி வழிகாட்டலைப் பெற,
- தகுதிக்கேற்ப விரும்பிய வேலைவாய்ப்புப் பெற
- கனவு நாட்டை நேர்மையான முறையில் சென்றடைய
Plan your bright future with us.
குறைந்த செலவில் குடும்பமாக கனடாவில் குடியேற....
WINSTAR VISA CONSULTANTS
உங்கள் நிறுவனங்களுக்கு திறமையான பணியாளர்களை குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள
WIN
Forever success
WINSTAR JOB BANK
இல.106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
Find a Job
web: www.winstarjaffna.com
fb.winstar visa consultants
021 300 4641
Fb : winstar job bank
021 320 2789



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய ‘போரும் சமாதானமும்’ என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

‘சுதந்திர வேட்கை’ என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் ‘Will To Freedom’ என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் ‘தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு’ என்ற பீடிகையுடன் வெளியானது.



129



## அத்தியாயம் - VII

## பேரவலமான இடம்பெயர்வு

தமிழர் வரலாற்றிலேயே என்றும் நிகழாத மனிதப் பேரவலமாக இந்த இடப்பெயர்வு நிகழ்ந்தது. விடுதலைப் புலிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவும் சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளால் தமது உயிருக்கு நிகழப்போகும் ஆபத்தை உணர்ந்தும், வலிகாமத்தின் ஒட்டு மொத்த சனத்தொகையும் அதாவது, ஐந்து லட்சத்துக்கும் அதிகமான மக்களும் தமது கைகளில் அகப்பட்ட பொருள்களை எடுத்துக் கொண்டு பிள்ளைகளையும் வயோதிபர்களையும் நோய்வாய்ப்பட்டவர்களையும் இழுத்துக் கொண்டு, வீதிகளில் இறங்கினார்கள். நாவற்குழிப் பாலத்தைக் கடந்து தென்மராட்சிப் பகுதியிலுள்ள கைதடிக்குள் கால் வைத்துவிட வேண்டும் என்பதே எல்லோரதும் ஏக்கமாகும். இந்த அவசரமும் அங்கலாய்ப்பும் காரணமாக எல்லோருமே முண்டியடித்துக் கொண்டு வீதிகளில் இறங்கினார்கள். சாவகச்சேரிக்குச் செல்லும் வீதிகள் எங்கும் சன சமுத்திரம். பயந்த பதற்றமடைந்த சனத்திரளால் வீதிகள் எங்கும் நிறைந்தன. மூச்சுத் திணறடிக்கும் நெரிசல். மக்கள் திரள் வீதிகளில் அடர்த்தியாக இறுகியதால் நகர்வு இயக்கம் திடீரென நின்றது. மக்களின் ஒரேயொரு போக்குவரத்துச் சாதனமான சைக்கிள்களும் சன நெருக்கடிக்குள் சிக்கி அசைவற்று நின்றன. நெரிசல்பட்ட பெருங்கூட்டமாக மனித ஊர்வலங்கள் பல மைல்கள் தூரத்துக்கு நீண்டு சென்றன. ஒரு சில யார்கள் தூரம் செல்வதற்குப் பல மணிநேரம் பிடித்தது.

இந்தப் பேரவலத்துக்கு மேலும் அவலம் சேர்ப்பது போல திடீரென மழை கொட்டியது. வானம் அழுது வடித்த கண்ணீர், தாகத்தால் தவித்த நாக்குகளை நனைத்தது. அது மட்டுமே அல்லல்பட்ட மக்களுக்கு அன்று கிடைத்த ஒரு துளி ஆறுதல். பசியால் குழந்தைகள் கதறி அழுதன. செய்வதறியாது பெற்றோர் பதைத்தனர். வயோதிபர்கள் வீதியோரம் குந்தியிருந்து மூச்சிழுத்தனர். பசியும் தாகமும் வருத்த மழையால் தெப்பமாக நனைந்ததால் நோய்வாய்ப்பட்டோர் மேலும் நோயுற்றனர். இந்த அவல நிகழ்வின் உணர்வு அழுத்தத்தால் ஒரு கர்ப்பிணிப் பெண் வீதியோரமாக திறந்த வெளியில் குழந்தை ஈன்றார். இத்தனை இன்னல்களுக்கும் மத்தியில் மக்களிடையே ஓர் உறுதிப்பாடு மட்டும் மேலோங்கி நின்றது. இனவெறி கொண்ட பகைவனின் கையில் சிக்கிவிடாது தப்பிவிட வேண்டும் என்பதுதான் அந்த உறுதிப்பாடாகும்.

வலிகாமத்தின் முழுச் சனத்தொகையுமே ஒட்டுமொத்தமாகப் புலம்பெயருமென சிங்கள அரசும் அதன் ஆயுதப் படைகளும் எதிர்பார்க்கவில்லை. இந்தப் பெரிய பரிமாணத்தில் தென்மராட்சி திசை நோக்கி யாழ்ப்பாண சன சமுத்திரம் இடம்பெயர்ந்துசெல்கின்றமையை அறிந்ததும் சிங்கள ஆட்சியாளர் விரக்தியும் ஏமாற்றமும் அடைந்தனர். பெரும் போர்நடத்தி இறுதியில் சனசஞ்சாரமற்ற ஒரு சூன்ய பிரதேசத்தையே சிங்கள இராணுவம் கைப்பற்றப் போகிறது என்பதை உணர்ந்ததும் அவர்களுக்கு மனமுறிவு ஏற்பட்டது. முன்னேறி வந்த சிங்களப் படைகளால் யாழ்ப்பாண மக்களின் இடப்பெயர்வை தடுத்து நிறுத்த முடியவில்லை. செய்வதறியாது தடுமாறிய ஆயுதப் படையினர் இடம் பெயர்ந்து செல்லும் மக்கள் மீது விமானத் தாக்குதலை நடத்தித் தமது கையாலாகாத நிலையையும் விரக்தியையும் வெளிப்படுத்தினர். செம்மணி வெளியில் நடந்த இந்தக் குண்டு வீச்சில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஐவர் காயமடைந்தனர். இந்தக் கோழைத்தனமான செயல் மக்களின் உறுதிப்பாட்டை உடைக்கவில்லை. நாவற்குழிப் பாலத்தை மக்கள் திரள் கடந்துகொண்டே இருந்தது. மூன்று அல்லது நான்கு நாள்களுக்குள். ஐந்து லட்சம் மக்கள் வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து புலிகளின் கீழுள்ள தென்மராட்சிப் பகுதியில் தஞ்சம் புகுந்தனர்.

இடம்பெயர்ந்த சன சமுத்திரத்தால் சாவகச்சேரி நிரம்பி வழிந்தது. சாவகச்சேரி ஒரு வரலாற்றுப் பழமைமிக்க பட்டினம். சாவகச்சேரி சந்தை மிகவும் பிரபலமானது. அந்த நிலம் தரும் கனிகளும் சுவைமிக்கவை. அந்தப் பட்டினத்திலுள்ள ஒவ்வொரு வீடும் புலம் பெயர்ந்த தமது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் வெளியாருக்கும் தஞ்சம் வழங்கியது. ஒரு வீட்டில் மட்டும் 60 பேர்வரை தங்கியிருந்து தண்ணீர் வசதியின்றி கழிப்பிட வசதியின்றி தவித்தமையை நான் அறிவேன். சாவகச்சேரி முழுவதிலுமாக - பாடசாலைகள், கல்லூரிகள், கோவில்கள், தென்னஞ்சோலைகள், மாந்தோப்புகள் எங்கு இடைவெளிகள் உண்டோ அங்கெல்லாம் மக்கள் முண்டியடித்துக் கொண்டு தமது குடும்பங்களுக்கு இடம் தேடினர். சாவகச்சேரி சந்தைக்கு மரக்கறி வாங்குவதற்கு நான் சைக்கிளில் சென்றபோது மனதை உருக்கும் அந்த அவலக் காட்சியை நான் நேரடியாகக் காணமுடிந்தது. இடம்பெயர்ந்த மக்களும் அவர்களது மூடை முடிச்சுகளுமாக சாவகச்சேரி நகரப் பகுதி நிரம்பி வழிந்தது. சில குடும்பங்கள் தமது மூடை முடிச்சுக்களை நிலத்தில் வைத்துவிட்டு எங்கே போவதென்று தெரியாது திகைப்புடன் நின்ற இடத்திலேயே நின்றுகொண்டிருந்தார்கள். இன்னும் சில குடும்பங்கள் சோர்ந்து சலித்துப் போய் வீதியோரமுள்ள மரங்களின்கீழ் இருப்பிடம் தேடிக் கொண்டார்கள். வெற்றுக் காணிகளில் அங்குமிங்குமாகக் குந்தியிருந்த மக்கள் தமது குடும்பத்தினரின் பசியைப் போக்குவதற்காக அடுப்பு மூட்டி சமையலுக்கு ஆயத்தம் செய்தார்கள். குழந்தைகள் கண்களைப் பிசைந்தபடி அழுது கொண்டிருந்தார்கள். முதியோரும் நோய்வாய்ப்பட்டோரும் குளிர் நிலத்தில் பாய்களை விரித்துப் படுத்திருந்தார்கள்.

இந்த வரலாற்று அவலத்தை நேரில் பார்த்தபொழுது ஓர் ஆழமான சோக உணர்வு என்னை ஆட்கொண்டது. இங்கு ஏதிலிகளாக இடம்பெயர்ந்து நிற்கும் மக்களில் அநேகமானோர் பூந்தோட்டங்களும் பழமரங்களும் நிறைந்த காணிகளையும் அவற்றில் கட்டப்பட்ட நேர்த்தியான அழகான வீடுகளையும் கைவிட்டே வந்தவர்கள். பரம்பரை பரம்பரையாகக் கடின உழைப்பால் தேடிய சொத்துக்களைக் கைவிட்டு வந்த இந்த மக்கள் இப்பொழுது திடீரென ஒரு நாள் பொழுதில் ஏதுமற்ற அகதிகளாகப் பாழ்பட்ட இழிநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். பெருமையும் கௌரவமும் மிக்க யாழ்ப்பாண மக்கள் இப்படியாக வீடு வாசலின்றி இருக்க இடமின்றி ஏழ்நிலைக்குத் தள்ளப்பட்டு ஏதிலிகளாக அலைந்து திரியும் இந்தத் துயரக் காட்சியைக் கண்டபோது துக்கம் நெஞ்சை அழுத்தியது. காலம் காலமாக எண்ணற்ற நூற்றாண்டுகளாகத் தாம் வாழ்ந்து வந்த புனித நகரை ஈழத்தமிழரின் கலாசார தலைநகரைக் கைவிட்டு வருவதற்கு முழுத் தமிழ்ச் சமூகமுமே நிர்ப்பந்திக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரிலும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் யாழ்ப்பாண மக்கள் வாழ்ந்த வாழ்க்கை சகிக்க முடியாததாக இருந்தது. உருப்படியான தங்குமிட வசதியின்றி, எல்லாவற்றுக்கும் மேலாக போதுமான உணவின்றி, இடம்பெயர்ந்த மக்கள் தாங்கொணாத் துன்பங்களை அனுபவித்தனர். யாழ்ப்பாண மக்களின் பேரவலத்துக்கு மேலும் துன்பம் சேர்ப்பதுபோல, சிங்கள இராணுவம் சாவகச்சேரி பிரதேசம் நோக்கி, பீரங்கி எறிகணைகளை ஏவியது. அப்பாவிப் பொதுமக்கள் மீது உயிர்ச் சேதத்தை விளைவித்து, அவர்களைக் கிலி கொள்ளச் செய்வதே இந்தத் தாக்குதலின் நோக்கமாகும். தென்மராட்சி மீதும் எந்த நேரமும் படையெடுப்பு நிகழலாம் என்பதையும் இந்தத் தாக்குதல்கள் அபாய எச்சரிக்கையாக மக்களுக்கு அறிவித்தன. இடம்பெயர்ந்த மக்களின் இந்தப் பேரவலம் குறித்து, சந்திரிகாவின் அரசோ, அன்றி சர்வதேச உலகமோ கவலையும் அக்கறையும் காட்டவில்லை.

> சொந்த மண்ணில் இருந்து வேரறுத்து, புலம் பெயர்ந்துள்ள யாழ்ப்பாண மக்களுக்கு உலக அரசுகள் உதவ வேண்டும் என முன்னாள் ஐ.நா. பொதுச் செயலாளர் பூட்ரோஸ் பூட்ரோஸ் காலி ஒரு பகிரங்க அழைப்பு விடுத்திருந்தார்

யாழ்ப்பாண மக்களுக்கு இழைக்கப்பட்ட இந்தக் கொடுமை பற்றி எதுவுமே தெரியாததுபோலக் கொழும்பு ஊடகங்கள் மௌனம் சாதித்தன. 'பயங்கரவாதிகளான' விடுதலைப் புலிகளிடமிருந்து யாழ்ப்பாண மக்களை 'விடுதலை' செய்வதற்காக, 'வீரம் படைத்த' சிங்கள இராணுவம் நிலைநாட்டிவரும் 'வீர சாதனைகள்' பற்றியே கொழும்புப் பத்திரிகைகள் புகழ் பாடின. யாழ்ப்பாண மக்களின் இடப்பெயர்வு பற்றி, ஆழ்ந்த கவலை தெரிவித்து ஒரு தனி நபர் மட்டும் குரல் எழுப்பினார். சொந்த மண்ணிலிருந்து வேரறுத்து, புலம் பெயர்ந்துள்ள யாழ்ப்பாண மக்களுக்கு உலக அரசுகள் உதவவேண்டும் என முன்னாள் ஐ.நா. பொதுச் செயலாளர் பூட்ரோஸ் பூட்ரோஸ் காலி ஒரு பகிரங்க அழைப்பு விடுத்திருந்தார். யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த மனித அவலம், சர்வதேசமயமாகிவிடுமோ எனப் பயந்த சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர், இலங்கையில் எந்தவிதமான மனித அவலமும் நிகழவில்லை என மறுத்தார். ஒரு சிறிய இடப்பெயர்வுச் சம்பவத்தைப் பெரிதுபடுத்த வேண்டாமென ஐ.நா. பொதுச் செயலாளர் நாயகத்தைக் கண்டித்த 'தமிழரான' இந்த அமைச்சர், ஓர் இறைமையுள்ள நாட்டின் 'உள்விவகாரத்தில்' தலையிட வேண்டாம் எனவும் எச்சரித்தார். யாழ்ப்பாணத் தமிழருக்காகக் கவலை தெரிவித்த ஒரேயொரு குரலையும் கதிர்காமர் நசுக்கிவிட்டார்.

(தொடரும்...)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




**ட்ரம்பின் அச்சுறுத்தல்கள் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய சக்திகளுக்கும், குறிப்பாக ஜேர்மனி மற்றும் பிரான்ஸுக்கும் இடையிலான ஆழ்ந்த பிளவையும் வெளிப்படுத்தி உள்ளன.**

ரஷ்யா தற்போது அதன் Zapad இராணுவப் பயிற்சியை மேற்கொண்டு வருகிறது. நேற்று TASS செய்தி ஸ்தாபனம் அறிவிக்கையில் ரஷ்ய படைகள் வெற்றிகரமாக RS-24 மூலோபாய அணுசக்தி ஏவுகணைகளைப் பரிசோதித்திருப்பதாக அறிவித்தது. இவை ரஷ்யாவின் Kamchatka தீபகற்பத்தில் அவற்றின் இலக்குகளைச் சரியாகச் சென்று தாக்கின.

ட்ரம்பின் அச்சுறுத்தல்கள் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய சக்திகளுக்கும், குறிப்பாக ஜேர்மனி மற்றும் பிரான்ஸுக்கும் இடையிலான ஆழ்ந்த பிளவையும் வெளிப்படுத்தி உள்ளன. ஐரோப்பிய அதிகாரிகளும் ஊடகங்களும், வட கொரியா மீதான இனப்படுகொலைத் தாக்குதல் குறித்த ட்ரம்பின் அச்சுறுத்தலைக் கண்டிக்காமல் அல்லது அதைக் குறித்து எதுவும் கூறாமல், உலகந்தழுவிய இராணுவ மோதல்கள் மற்றும் பல பிரச்சினைகளில் அமெரிக்க வெளியுறவுக் கொள்கைக்கு எதிராக அவர்களின் பகிரங்க எதிர்ப்பைக் காட்டுவதற்கு நகர்ந்து வருகின்றனர் என்பதைத் தெளிவுபடுத்தினர்.

பிரெஞ்சு நாளிதழ் Le Monde ''எஞ்சிய சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரையில், (ட்ரம்பின்)உரை ஒரு கடுமையான சவாலாகும். குறிப்பாக அமெரிக்காவின் கூட்டாளியும் தனிச்சலுகை கொண்ட பங்காளியாக இருந்துமான, இப்போது காலநிலை, ஈரான், பன்முகத்தன்மை போன்ற பல பிரச்சினைகளில் வொஷிங்டனை எதிர்த்து வருவதுமான, ஐரோப்பாவைப் பொறுத்தவரையில் இப்படித்தான் உள்ளது. இரண்டு மணிநேரத்துக்குப் பின்னர் ஜனாதிபதி இமானுவல் மக்ரோனின் உரை, வியத்தகுவகையில் ட்ரம்புக்கு முரண்பட்டு இருந்தது. அட்லாண்டிக் கூட்டணி அதன் அர்த்தத்தை இழந்து வருகிறது'' என்று கருத்துரைத்தது.

ஜேர்மன் சான்சிலர் அங்கேலா மேர்க்கெல் கூறுகையில், வடகொரியாவில் ''இந்த மோதலுக்கு ஒரு சமாதானமான, இராஜாங்க ரீதியிலான தீர்வு மட்டுமே சாத்தியம். வேறு எதுவொன்றும் பேரழிவுக்கே இட்டுச் செல்லும். அதை நான் வலுவாக நம்புகிறேன்'' என்று எச்சரித்தார். ஒரு சமாதான தீர்வுக்காக ''எனது முழு பலத்துடன்'' போராட இருக்கின்றேன் என அவர் தொடர்ந்து தெரிவித்தார்.

ட்ரம்பின் இனப்படுகொலை அச்சுறுத்தல்களை ஜேர்மன் வெளியுறவுத் துறை அமைச்சர் சிக்மார் காப்ரியேல் சாந்தமான தொனியில் ''பொருத்தமற்றது'' என்றார். ''இதுபோன்ற போருக்கு ஒத்த வீராவேச பேச்சுக்களைக் கொண்டு நாம் ஒரு படி கூட முன்நகர முடியாது'' என்பதையும் சேர்த்துக் கொண்டார்.




**ஐ.நாவில் ட்ரம்ப் உரையின் போது வேண்டுமென்றே கலந்து கொள்ளாத பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவல் மக்ரோன், ஏற்கனவே, ட்ரம்ப் உரைக்குப் பின்னர் உடனடியாக ஐ.நாவில் பேசியிருந்தார்**

ஐ.நாவில் ட்ரம்ப் உரையின் போது வேண்டுமென்றே கலந்து கொள்ளாத பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவல் மக்ரோன், ஏற்கனவே, ட்ரம்ப் உரைக்குப் பின்னர் உடனடியாக ஐ.நாவில் பேசியிருந்தார். கொரியாவிலும், அத்துடன் ட்ரம்ப் அச்சுறுத்திய உலகின் வேறெந்த ஆட்சிக்கு எதிராகவும் ''எந்தவொரு தீவிரப்பாட்டையும் (பிரான்ஸ்) எதிர்க்கும்'' என்று அவர் தெரிவித்தார். ட்ரம்ப் அச்சுறுத்துகின்றமையைப் போல, 2015 ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தை பயனற்றதாக ஆக்கும் ஒரு தலைப்பட்சமான முயற்சி ''பொறுப்பற்றதாக'' இருக்கும் என்று கூறிய மக்ரோன், ''மரணகதியிலான'' போர் ''சுழலுக்குள்'' இறங்குவது சாத்தியமாகி விடுமென தெஹ்ரான் மற்றும் வொஷிங்டனை அவர் எச்சரித்திருக்கிறார் எனவும் சேர்த்துக் கொண்டார்.

அதன் வெளியுறவுக் கொள்கையை மீள இராணுவமயப்படுத்துவதற்கான மூன்றாண்டு காலப் பழைய அதன் இப்போதைய பிரசாரத்துடன் சேர்ந்து, ஜேர்மனியின் வழிகாட்டுதலில், ஐரோப்பிய அரசுகள் அவற்றின் பல பில்லியன் யூரோ இராணுவ செலவின அதிகரிப்புகளை தீவிரப்படுத்துவதன் மூலமாக அதிகரித்து வரும் போர் அச்சுறுத்தலுக்கு விடையிறுக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ட்ரம்பின் ஐ.நா. உரையைப் போலவே, ஐரோப்பிய மற்றும் சர்வதேச சக்திகளின் எதிர்வினையும் ஒரு நீண்ட பரிணாமத்தின் விளைவாகும். ஸ்ராலினிச அதிகாரத்துவத்தால் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டு, வொஷிங்டனுக்கு இராணுவ எதிர்ப்பலம் இல்லாமல்போன ஒரு கால் நூற்றாண்டில், அமெரிக்க ஏகாதிபத்தியம் மத்திய கிழக்கிலும் உலகெங்கிலும் தீவிர ஆக்கிரமிப்பு போர்களில் தஞ்சமடைந்ததன் மூலமாக அதன் அதிகரித்து வந்த பொருளாதார பலவீனத்திற்கு எதிர் நடவடிக்கை எடுக்க முனைந்தது. அது




உலக முதலாளித்துவத்தின் நிதியியல் மற்றும் இராணுவ அச்சாணியாகத் தொடர்ந்து செயற்பட்டதுடன், அதுவே அதன் ஐரோப்பிய போட்டியாளர்களுக்கு அதிகரித்தளவில் இராணுவவாத மற்றும் சிக்கன கொள்கைகளுக்கான ஒரு முன்மாதிரியாகவும் ஆனது.

வடகொரியாவில் 25 மில்லியன் மக்களைக் கொல்லும் ட்ரம்ப் அச்சுறுத்தல்களுக்கு எந்தவொரு சர்வதேச கண்டனமும் இல்லாதிருப்பது, உலகெங்கிலும் ஆளும் வர்க்கத்தின் அரசியல் சீரழிவுக்கு ஓர் அளவீடாகும். அவர்கள் ஒன்றும் கூறவில்லை ஏனென்றால் - ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் அல்லது லிபியா, சிரியா மற்றும் உக்ரேனில் அமெரிக்க தலைமையிலான போர்களில் ஐரோப்பிய சக்திகளும் அமெரிக்காவின் ஏனைய கூட்டாளிகளும் இணைந்த ஒரு கால் நூற்றாண்டுக்குப் பின்னர் - அவர்களும் போர் மற்றும் வன்முறையின் கொடூர மட்டங்களுக்குள் தஞ்சமடைய தயாரிப்புச் செய்து வருகின்றனர்.

ஒரு புரட்சிகர சோசலிச வேலைத் திட்டத்தின் மீது செயற்பட்டு, போர் முனைவை எதிர்க்கக்கூடிய ஒரே சக்தி சர்வதேச தொழிலாளர் வர்க்கம் மட்டுமே என்பதையே ஆளும் உயரடுக்கின் திவால்நிலைமை எடுத்துரைக்கிறது. ஐ.நா. சபைக்கான அவரது உரையில் ட்ரம்ப் வெறித்தனமாக சோசலிசத்தைக் கண்டித்ததன் முக்கியத்துவத்தை இது சுட்டிக்காட்டுகிறது. இது குறித்து அரசியல்வாதிகளும் ஊடகங்களும் நடைமுறையளவில் முற்றிலும் மௌனமாகி விடுகின்றனர். அவர்கள் ஒரு கொடூரமான அணுஆயுத மோதலின் விளிம்பில் இருக்கிறார்கள் என்பது ஊழல்பீடித்த பெரும் பணக்கார ஆளும் வர்க்கத்தின் அரசியல் பிரதிநிதிகளுக்கு நன்கு தெரியும். ஒரு போர் நெருக்கடியானது, உலக முதலாளித்துவத்தின் மீது முற்றிலும் மதிப்பிழந்துள்ள மக்களிடையே வேகமாக ஓர் அரசியல் மாற்றத்தை தூண்டுமென அவர்கள் அஞ்சுகிறார்கள்.

இதற்கிடையே, ஐரோப்பிய சக்திகளும் அத்துடன் சீனாவும் மற்றும் ரஷ்யாவும் அமெரிக்காவுடன் முன்பினும் கூர்மையான இராஜாங்க மூலோபாய மோதலுக்குள் நகர்ந்து வருகின்றன. உக்ரேனிய ஜனாதிபதி பெட்ரோ பொரோஷென்கோ, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் பேசுகையில், OSCE இன் கண்காணிப்பாளர்களை சர்ச்சைக்குரிய ரஷ்ய மொழி பேசும் டொன்பாஸ் பகுதிக்கு அனுப்புமாறு கோரிக்கை விடுத்தார். உக்ரேனில் 2014 நேட்டோ - ஆதரவிலான ஆட்சிக் கவிழ்ப்பு சதிக்குப் பின்னர் இருந்து அந்தப் பகுதியில் ரஷ்ய - ஆதரவிலான போராளிகள் குழுக்களின் எதிர்ப்பை கியேவ் முகங்கொடுத்துள்ளது.

மாஸ்கோவுக்கு எதிராக உக்ரேனிய ஆட்சியை ஆயுதமயப்படுத்த வேண்டுமென வொஷிங்டனில் இருந்து தொடர்ந்து அழைப்புகள் விடுக்கப்படுகின்றன - இந்தவொரு கொள்கையானது, ரஷ்யாவுடனான ''முழு அளவிலான போர்'' அபாயம் குறித்து ஜேர்மனியும் பிரான்ஸும் எச்சரிக்கை விடுப்பதற்கும், 2015 ஆம் ஆண்டில் மின்ஸ்கில் உக்ரேன் மற்றும் ரஷ்யாவுடன் தனித்தனியாக சமாதான உடன்படிக்கை செய்து கொள்வதற்கும் அவற்றிற்கு அழுத்தமளித்தது. அண்மையில் மக்ரோன் அறிவிக்கையில், ''மின்ஸ்க் உடன்படிக்கையின் உள்ளடக்கத்தில், உக்ரேனில் வன்முறைகளைக் குறைக்கவும் மற்றும் சீர்திருத்தங்களைத் தொடரவும்'' ஜேர்மனி, ரஷ்யா மற்றும் உக்ரேனுடன் பிரான்ஸ் ஒரு புதிய சந்திப்பை நடத்த முயலுமென அறிவித்தார்.



(கேள்வி தொடரும்)

# ஆப்கனில் தற்கொலைத் தாக்குதல்: 15 பேர் பலி; 40 பேர் வரை படுகாயம்!

காபூல்,ஒக்.18

ஆப்கானிஸ்தானில் பொலிஸ் பயிற்சி மையம் மீது தற்கொலைப்படை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் 15 பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸாரைக் குறிவைத்துத் தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். சில பகுதிகளில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கமும் உள்ளது. இவர்களை ஒடுக்குவதற்கு அமெரிக்கா வான் வழித் தாக்குதல்களை நடத்திவருகிறது. குன்பூர் மாகாணத்தில் சமீபத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 14 ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், பாக்தியா மாகாண தலைநகரான கார்டிஸில் உள்ள பொலிஸ் பயிற்சி மையத்தைக் குறிவைத்து தீவிரவாதிகள் நேற்றுத் தாக்குதல் நடத்தினர். முதலில் தற்கொலைப்படை தீவிரவாதி ஒருவன், காரில்வெடிகுண்டுகளை ஏற்றிச் சென்று பயிற்சி மையத்தின் எல்லைச் சுவர் அருகே வெடிக்கச் செய்து, உள்ளே நுழைவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளான்.

பின்னர் அந்த வழியாகத் தீவிரவாதிகள் பயிற்சி மையத்தினுள் புகுந்து தாக்கத் தொடங்கினர். பொலிஸாரும் பதில் தாக்குதல் நடத்தினர். நீண்ட நேரமாக இரு தரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது.

இந்தத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சண்டையில் 15 பேர் உயிரிழந்தனர்எனவும்,நாற்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்திருக்கின்றனர் எனவும் தகவல் வெளியாகி உள்ளது. காயமடைந்த பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது.

பாக்தியா பொலிஸ் தலைமையகம் அருகே நடைபெற்ற இந்தத் தாக்குதலுக்கு தலிபான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. (உ)

## ஜப்பானில் முற்கூட்டியே தேர்தலை நடத்துவதால் பிரதமர் அபேக்கு பிரகாசமான வெற்றிவாய்ப்பு!



டோக்கியோ,ஒக்.18

ஜப்பானில் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய பிரதமர் ஷின்சோ அபேக்கு வெற்றி வாய்ப்பு இருக்கின்றது எனக் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயின் பதவிக்காலம் ஓராண்டில் நிறைவடைய உள்ளது. ஆனால், வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தல் காரணமாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு முன்கூட்டியே தேர்தலை நடத்த பிரதமர் ஷின்சோ அபே தீர்மானித்தார்.

வடகொரியாவுக்கு எதிரான ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயின் நடவடிக்கை குறித்து நடத்தப்பட்ட மாதிரி வாக்கெடுப்பில் அவருக்கு ஆதரவாக 44 சதவீதம் பேர் வாக்களித்திருந்தனர். முக்கிய எதிர்க்கட்சியான ஜன நாயகக் கட்சிக்கு வெறும் எட்டு சதவீதம் மக்கள் மட்டுமே ஆதரவு தெரிவித்தனர்.

எனவே, மக்கள் செல்வாக்கு உள்ள போதே நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி மீண்டும் பிரதமராக தீர்மானித்த ஷின்சோ அபே நாடாளுமன்றத்தின் கீழ் அவையை (பிரதிநிதிகள் சபை) கடந்த மாதம் கலைத்தார். இதையடுத்து ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்தத் தேர்தலில் ஆளும் லிபரல் குடியரசு கட்சிக்கும் எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சிக்கும்தான் நேரடி போட்டி உள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நடைபெற உள்ள நிலையில், ஊடகங்களில் கருத்துக்கணிப்புகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இதில், முக்கிய நாளிதழான மைனிச்சி நடத்திய கருத்துக்கணிப்பில் ஷின்சோ அபே மீண்டும் பிரதமர் ஆவதற்கு வாய்ப்பு உள்ளதாக தெரியவந்துள்ளது. நாடு முழுவதும் சுமார் 73 ஆயிரம் வாக்காளர்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டுள்ளது.

மொத்தம் 465 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றக் கீழ் அவையில் ஷின்சோ அபே கட்சிக்கு 281 முதல் 303 உறுப்பினர்கள் வரை கிடைக்க வாய்ப்பு உள்ளதாகக் கருத்துக் கணிப்பு கூறுகிறது. கூட்டணி கட்சியான கொமீட்டோ 30 முதல் 33 இடங்களைப் பிடிக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. (உ)

## ஆஸ்திரியாவின் தலைவராக 31 வயது இளைஞர் கூர்ட்ஸ்



ஆஸ்திரியாவின் கன்சர்வேட்டிவ் மக்கள் கட்சி சமீபத்தில் நடந்து முடிந்த நாட்டின் பொதுத் தேர்தலில் அதிக சதவீத வாக்குகளையும், இடங்களையும் வென்றுள்ளது. இதையடுத்து அந்தக் கட்சியின் தலைவரான ஜெபாஸ்டியன் கூர்ட்ஸ் நாட்டின் வேந்தராகவுள் ஜெபாஸ்டினுக்கு வயது 31.

அவரது மக்கள் கட்சி 31 சதவீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை வென்று முன்னணியில் உள்ளது . இரண்டாவது இடத்தைப் பிடிக்கப்போவது சமூக ஜனநாயக கட்சியா அல்லது சுதந்திர கட்சியா என்பதில் இது வரை தெளிவற்ற நிலை நிலவுகிறது.

ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மைக்குக் குறைவான இடங்களே வென்றுள்ளதால் அகதிகளுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடிக்கும் சுதந்திரக் கட்சியின் கூட்டணியை ஜெபாஸ்டியன் கூர்ட்ஸ் நாடலாம்.

இந்த வெற்றி குறித்து ஆதரவாளர்களிடம் பேசிய ஜெபாஸ்டியன் ''இது நாட்டில் மாற்றத்துக்கான நேரம். இந்த நாட்டை மாற்றுவதற்கு இன்று நமக்கு ஒரு வலுவான கட்டளை இடப்பட்டுள்ளது. இதை சாத்தியமாக்கிய உங்கள் எல்லோருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

யார் இந்த ஜெபாஸ்டியன் கூர்ட்ஸ் ?

இந்தத் தேர்தலுக்கு முன்னதாக ஐரோப்பாவின்மிகஇளவயதுவெளியுறவுத்துறை அமைச்சராக பணியாற்றினார் கூர்ட்ஸ். கடந்த 2013 ஆம்ஆண்டுஅவர்வெளியுறவுத்துறை அமைச்சராகப் பணியமர்த்தப்பட்டார். அப்போது அவருக்கு வயது 27.

கடந்த மே மாதம் மக்கள் கட்சியின் தலைவரானார் கூர்ட்ஸ் இவர் தனது அரசியல் வாழ்க்கையை கட்சியின் இளைஞர் பிரிவில் இருந்து தொடங்கினார். அவர் கட்சியின் இளைஞர் பிரிவுக்கு தலைமை வகித்தார். அதன் பின்னர் வியன்னாவின் நகர சபையில் பணியாற்றினார்.

ஜெபாஸ்டியனுக்கு 'வுண்டர்வுஜ்ஜி' என்றொரு செல்லப்பெயரும் இருந்தது. அந்தப் பெயரின் அர்த்தம் ''தண்ணீரிலும் நடக்கக்கூடியவன்''.

பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் மற்றும் கனடாவின் அதிபர் ஜஸ்டின் ட்ருடோ ஆகிய இளம் தலைவர்களுடன் இவர் ஒப்பிடப்படுகிறார்.

மக்ரோனை போலவே கூர்ட்ஸும் தன்னைச் சுற்றி ஓர் இயக்கத்தை உருவாக்கினார். மக்கள் கட்சியை மறுசீரமைப்பு செய்தார். (உ)

## கொரிய தீபகற்பத்தில் பெரும் போர்ப் பதற்றம்!

ஐ.நா.மற்றும் உலகநாடுகளின்எதிர்ப்பை மீறி ஆயுதப் பரிசோதனைகளில் ஈடுபட்டுவரும் வடகொரியாவின் நடவடிக்கையால் அமெரிக்கா - வடகொரியா இடையே முரண்பாடு முற்றி வருகிறது.

குறிப்பாக கடந்த மாதம் 3 ஆம் திகதி வடகொரியா நடத்திய 6 ஆவது மற்றும் மிகப்பெரிய அணு ஆயுத சோதனையும், ஜப்பானுக்கு மேலே ஏவுகணை பறக்க விட்ட சம்பவமும் சமீப காலமாக அங்கு போர் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளன.

வடகொரியாவின் இந்த அச்சுறுத்தலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்கா கடற்படை பயிற்சியை நேற்றுமுன்தினம் தொடங்கி உள்ளது. கொரிய தீபகற்பத்தின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்பகுதியில் நடைபெறும் இந்த பயிற்சி வருகிற 20 ஆம் திகதி வரை நடக்கிறது.

இதில் அமெரிக்காவுக்கு சொந்தமான, அணுசக்தியில் இயங்கும் யு.எஸ்.எஸ். ரொனால்டு ரீகன் விமானந்தாங்கி போர்க்கப்பல் உட்பட இரு நாடுகளையும் சேர்ந்த 40 கடற்படைக் கப்பல்கள் பங்கேற்கின்றன. அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் இந்தக் கூட்டு கடற்படைப் பயிற்சியை 'ஒரு போர் ஒத்திகை' என வடகொரியா கூறியுள்ளது. இதனால் அங்கு போர்ப்பதற்றம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.

இந்த நிலையில் வடகொரியாவின் ஐ.நா. துணைத்தூதர் கிம் இன் ரயோங் கொரிய தீபகற்பத்தின் நிலைமை குறித்து நேற்று எச்சரிக்கை ஒன்றை விடுத்தார். இங்கு ஒரு தொடக்கம் ஏற்பட்டு உள்ளது. அணு ஆயுத போர் எந்த நேரத்திலும் வெடிக்கலாம் என எச்சரித்து உள்ளார்.

மேலும் அவர் கூறும்போது, 1970 ஆம்ஆண்டிலிருந்தே அமெரிக்காவிடம் இருந்து நேரடியாக மற்றும் தீவிர அணுஆயுத அச்சுறுத்தல் உள்ள ஒரே நாடு வடகொரியாதான் .

தற்காப்பிற்காக அணு ஆயுதங்களை வைத்திருப்பதற்கான உரிமை எங்கள் நாட்டிற்கு உண்டு. ஒவ்வோர் ஆண்டும் ''அணுசக்தி ஆயுதங்களை'' பயன்படுத்தி பெரிய அளவிலான இராணுவ பயிற்சிகள் நடைபெறுகின்றனு.

மிகவும் ஆபத்தானது என்னவென்றால், நமது சுப்ரீம் தலைமையை அகற்றுவதற்காக இரகசிய நடவடிக்கை மேற்கொள்ள அமெரிக்கா திட்டம் ஒன்றை உருவாக்கி வருகிறது. - எனக் கூறினார்.

# காங்கிரஸ் தலைவராக ராகுல் மிக விரைவில் பட்டாபிஷேகம்!



## தாயார் சோனியா காந்தி தீர்மானம்

புதுடில்லி,ஒக்.18

இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான இந்திய தேசிய காங்கிரஸின் உப தலைவராக இருக்கும் ராகுல் காந்தி விரைவில் அதன் தலைவராகிறார். அவரின் தாயார் சோனியா காந்தி தமது தலைமைப் பதவியை மகன் ராகுலிடம் ஒப்படைக்க முடிவெடுத்து விட்டார்.

பஞ்சாப் மாநிலம் குர்தாஸ்பூர் லோக்சபா தொகுதியில் காங்கிரஸ் அதிக வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிறது. இதையடுத்து, இந்தியா முழுவதும் காங்கிரஸ் தலைவர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

அதேநேரம், இந்த இடைத் தேர்தல் தோல்வியால், ஆளும் பா.ஜ.க. அதிர்ச்சி அடைந்துள்ளது.

பஞ்சாபில் காங்கிரஸ் அரசு இருந்தாலும், அங்கும் எப்படியாவது வெற்றி பெற்று, மத்தியில் ஆட்சி மிகச் சிறப்பாக நடப்பதற்கு மக்கள் அளித்திருக்கும் சான்றிதழ் என்று சொல்லி, தீவிர பிரசாரத்தில் ஈடுபடலாம் என்றே, பா.ஜ.க. தலைவர்கள் நினைத்திருந்தனர். ஆனால், அதற்கு நேர் மாறாக, முடிவுகள் அமைந்ததும், அதிர்ச்சி அடைந்துள்ளனர். இதன் பாதிப்பு, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களுக்கு விரைவில் நடக்கவிருக்கும் சட்டசபை தேர்தலிலும் எதிரொலிக்குமோ என்ற அச்சமும் பா.ஜ.கவுக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்த வெற்றிக் கொண்டாட்டம் இருக்கும் போதே, அகில இந்திய காங்கிரஸ் தலைவராக, துணைத் தலைவர் ராகுலை நியமித்து, தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கிவிட சோனியா முடிவெடுத்துள்ளார்.

இது குறித்து, காங்கிரஸ் தலைவர்கள் கூறியவை வருமாறு:- திருமணம் வேண்டாம் என்று தாய் சோனியாவிடம், ராகுல் உறுதியாகத் தெரிவித்து விட்ட நிலையில், அவரைக் கட்சியில் அடுத்த நிலைக்கு எடுத்து சென்று விட முடிவெடுத்துத்தான், கட்சித் தலைவர் பதவியை ராகுலுக்கு விட்டுக் கொடுக்க சோனியா தீர்மானித்தார். இதை, அவரிடம் தெரிவித்து, அதற்கான ஒப்புதலை பெற்றதும்தான், சாடைமாடையாக அத்தகவலை அவர் வெளியில் கசிய விட்டார். கட்சியின் மூத்த தலைவர்கள் யாரும் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்களா என்ற சோதனைகளையெல்லாம் முடித்த சோனியா, தற்போது, தலைவர் பதவிக்கான பட்டாபிஷேகம் ராகுலுக்கு விரைவில் நடத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்.

முன்னதாக, தன்னை அவ்வப்போது சந்திக்கும் மாநில காங்கிரஸ் தலைவர்களிடம், ராகுல் குறித்து வலுக்கட்டாயமாகபேசி, அவர்கள் ஒவ்வொருவரின் கருத்தையும் சோனியா அறிந்து கொண்டார். முரண்படும் சில தலைவர்களிடம், ராகுல், அடுத்து தலைவர் ஆக வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திச் சொல்லி, ஒருவேளை, தலைவர் ஆக்கப்பட்டால், அவருக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

தற்போது, குர்தாஸ்பூர் வெற்றிக்குப் பின், சோனியாவுக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி, ராகுலை, காங்கிரஸின் அடுத்த தலைவராக்கி விடுவது என்று முடிவெடுத்து, அதற்காக, அவசர அவசரமாக பல காரியங்களைச் செய்து வருகிறார்.



இதற்காக, ராகுலுக்கு, சமீப நாள்களாக வீட்டில் சோனியா நிறைய விஷயங்களை பகிர ஆரம்பித்திருக்கிறார். தலைவர் ஆகி விட்டால், ராகுல், பக்குவத்துடன் செயல்படுவார் என்றும், சோனியா, காங்கிரஸின் டில்லி தலைவர்களிடம் தொடர்ந்து கூறி வருகிறார்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவராக ராகுல் அறிவிக்கப்பட்டதும், அவரை, இந்தியா முழுவதும் பயணம் செய்து, மக்களையும், காங்கிரஸ் தலைவர்களையும், தொண்டர்களையும் சந்திக்குமாறும், சோனியா கேட்டுக் கொண்டிருக்கிறார். ராகுல் தலைவரானதும், காங்கிரஸில் பல அதிரடி மாற்றங்கள் நடக்கும். - இவ்வாறு அந்த தலைவர்கள் கூறினர்.

(உ)

# இராணுவ ஆட்சி ஒன்று ஏற்படுவதுதான் இந்தியாவில் அநேகரின் விருப்பமாம்!

## ஆய்வறிக்கையில் அதிர்ச்சித் தகவல்

புதுடில்லி, ஒக்.18

இந்தியாவில் அதிகம் பேர் அங்கு இராணுவ ஆட்சி ஏற்படுவதை விரும்புகின்றனராம்.

அமெரிக்காவைச் சேர்ந்த 'பியூ' என்ற நிறுவனம் பல்வேறு நாடுகளில் பல்வேறு தலைப்புகளில் கள ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

அந்நிறுவனம் இந்தியாவில் தனது கள ஆய்வை மேற்கொண்டது. அந்த வகையில் இந்தியர்கள் எப்படிப் பட்ட ஆட்சி மற்றும் தலைவர்களை விரும்புகிறார்கள் என்ற வகையிலான ஒரு கள ஆய்வை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகள் சற்றே அதிர்ச்சி அளிக்கும் விதமாக வெளி வந்துள்ளதன.

உலகின் மிகப்பெரிய ஜனநாயகநாடு என்றழைக்கப்படும் இந்தியாவில், இந்தியர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் இராணுவ ஆட்சி வரவேண்டும் எனக் கூறியிருக்கின்றனர் என பியூ நிறுவனம் ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளதே இதற்குக் காரணம்.

இந்தியாவில் மேற்கொண்ட கள ஆய்வு குறித்து அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 85 வீத இந்தியர்கள் தங்களது அரசு மீது நம்பிக்கை வைத்துள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயம் தங்களுக்கு வலிமையான தலைவர் தேவை என்று 27 வீத இந்தியர்கள் விரும்புகின்றனர் எனவும், 53 சத வீதம் பேர் இராணுவ ஆட்சியை விரும்புகின்றனர் எனவும் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது. மேலும் 65 வீதப் பேர், தங்களைப் பல்துறை வல்லுநர்கள் ஆள வேண்டும் எனக்கருத்துத் தெரிவித்தனர் என பியூ நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது.

இந்தியர்களைப் போல, 52 வீதத் தென்னாபிரிக்கர்களும் இராணுவ ஆட்சியை விரும்புகின்றனர் எனக் கூறப்பட்டுள்ளது. (உ)

# முதல்வர் பதவி ஏற்க சசிகலாவை அழைக்காமல் தாமதித்தமை ஏன்?

## முன்னாள் ஆளுநர் புத்தகத்தில் விவரம்



சென்னை, ஒக்.18

தமிழகத்தில் பொறுப்பு ஆளுநராக இருந்த வித்யா சாகர் ராவ் தனது பதவிக் காலத்தில் நடந்த பல்வேறு பரபரப்புச்சம்பவங்கள்குறித்த நிகழ்வுகளை தொகுத்து புத்தகமாக எழுதியுள்ளார். அந்த புத்தகத்துக்கு அந்த நிகழ்வுகள் நடந்த நாள்கள் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தைத் துணை ஜனாதிபதி வெங்கய்யா நாயுடு, ஆளுநர் பன்வாரிலால் ஆகியோர் வெளியிட்டு வைத்தனர்

இந்தப் புத்தகம் மொத்தம் 12 அத்தியாயங்கள் கொண்டது. ஒவ்வோர் அத்தியாயத்திலும் ஒவ்வொரு சம்பவத்தை ஆளுநர் வித்யா சாகர் ராவ் எழுதியுள்ளார். முதல் 3 அத்தியாயங்களில் ஜெயலலிதா பற்றி எழுதியுள்ளார்.

6ஆவது அத்தியாயத்தில் ஓ.பன்னீர்செல்வம் இராஜினாமா மற்றும் ஆட்சி அமைக்க சசிகலா உரிமை கோரி இருந்தமை பற்றிய தகவல்களை மிகவும் விறுவிறுப்புடன் வித்யாசாகர் ராவ் எழுதியிருக்கிறார். ஜெயலலிதா மரணத்துக்குப் பிறகு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அ.தி.மு.க. பொதுச்செயலாளராகப் பதவி ஏற்ற சசிகலா, பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி முதலமைச்சராகப் பதவி ஏற்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். ஓ.பி.எஸ். பதவி விலகியதும், அ.தி.மு.கழக எம்.எல்.ஏக்களால் சட்டசபை கட்சித் தலைவராக சசிகலா தேர்வானார். ஆனால் அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைக்க வித்யாசாகர் ராவ் அவசரம் காட்டவில்லை.

சசிகலாவை முதலமைச்சராகப் பதவி ஏற்க வரும்படி வித்யாசாகர் ராவ் அழைப்பு விடுக்கவில்லை. சசிகலா மிரட்டும் தொனியில் அறிக்கை விட்டபோதுகூட அவர் அதைக் கண்டுகொள்ளவில்லை. இதுபற்றித் தனது புத்தகத்தில் எழுதியுள்ள வித்யாசாகர் ராவ், அந்த சமயத்தில் சசிகலாவை அழைக்காதமை ஏன் என்பது பற்றியும் எழுதியுள்ளார்.

சசிகலா ஆட்சி அமைக்க உரிமை கோரினார். ஆனால், ஆளுநர் அவசரப்படவில்லை. சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தினார். சொத்துக் குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வெளியாக இருந்ததால் அதுவரை காத்திருக்க முடிவு செய்தார். அந்த முடிவின்படி செயற்பட்டமையால் அவர் சசிகலாவுக்கு அழைப்பு விடுக்கவில்லை.

-இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மைலோ கிண்ண உதைபந்தாட்டம்:

# சிவநகர், முழங்காவில் அணிகள் 'சுப்பர் 10' குழுக்களுக்குள் இடம்

## கிளிநொச்சி, முல்லை. மாவட்டப் பிரிவில்

(கங்கா)

மைலோ கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், 16 வயதுப்பிரிவின் சுப்பர் 10 அணிகளுக்குள் சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை



மற்றும் முழங்காவில் மகா வித்தியாலய அணிகள் உள்நுழைந்தன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும், யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகங்களும் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள உதைபந்தாட்டகழகங்கள் மற்றும் பாடசாலை அணிகளுக்கிடையில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடத்தி வருகின்றன.

கிளிநொச்சி – யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 11 இடங்களில் இந்தச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 16 வயதுப்பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான போட்டிகள் முழங்காவில் மகா வித்தியாலயத்தில் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

முதற்சுற்று ஆட்டங்களில், வேரவில் இந்து மகா வித்தியாலய அணி, 1:0 என்ற கோல் கணக்கில், தர்மபுரம் மத்திய கல்லூரி அணியையும், ஸ்ரீ விக்னேஸ்வரா கல்லூரி அணி 5:4 என்ற கோல்கள் கணக்கில் பிரமந்தனாறு மகா வித்தியாலய அணியையும்,







இரணைதீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி 4:2 என்ற கோல்கள் கணக்கில் வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணியையும், கிளிநொச்சி மகா வித்தியாலய அணி, 2:1 என்ற கோல்கள் கணக்கில் திருவையாறு மத்திய மகா வித்தியாலய அணியையும் வென்றன.

முழங்காவில் மகா வித்தியாலய அணி, எதிரணியான கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி வராமையால் வெற்றிபெற்றது.

சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, வலைப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் உருத்திரபுரம் மகா வித்தியாலய ஆகிய அணிகள் நேரடியாக இரண்டாம் சுற்றிலிருந்து போட்டிகளில் பங்குபற்றின.

இரண்டாவது சுற்றில், சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணி, 3:2 என்ற கோல்கள் கணக்கில் வேரவில் அணியையும், இரணைதீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 1:0 என்ற கோல் கணக்கில் ஸ்ரீ விக்னேஸ்வரா கல்லூரி அணியையும், முழங்காவில் மகா வித்தியாலய அணி 2:1 என்று பெனால்ட்டி உதையில் உருத்திரபுரம் மகா வித்தியாலய அணியையும், கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 4:3 என்ற பெனால்ட்டி கோல்கள் மூலம் வலைப்பாடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியையும் வென்றன.

மூன்றாவது சுற்றில் சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி, பெனால்ட்டி உதையில் 3:2 என்ற கோல்கள் கணக்கில் இரணைதீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியை வென்றது.

அதேபோல் முழங்காவில் மகா வித்தியாலய அணி, 2:1 என்ற கோல்கள் கணக்கில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியையும் வென்றது. இந்த இரண்டு அணிகளும், கிளிநொச்சி – முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் நடைபெறும், மைலோ கிண்ண சுப்பர் 10 அணிகளுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன.

# சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரிப்பதற்கு இறுதிவரை போராடிய புத்தூர் கலைமதி

(கங்கா)

ஸ்ரீ முருகன் விளை யாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், அமரர் முத்துலிங்கம் ஜெகநாதன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் புத்தூர் கலைமதி அணி சம்பியினாகியது.

இந்தச் சுற்றுப்போட்டியில் கரப்பந்தாட்டத்தில் முன்னணியில் திகழும் கழகங்கள் பங்குபற்றின.

மேற்படி சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டங்களில், புத்தூர் கலைமதி அணி, ஆவரங்கால் மத்தியையும், ஆவரங்கால் இந்து இளைஞர் அணி, நாயன்மார்கட்டு பாரதி அணியையும் வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தன.

இறுதிப்போட்டி கடந்த 14 ஆம் திகதி இரவு நடைபெற்றது. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதியது.

புத்தூர் கலைமதி அணி, முதற்செற்றை 25:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் மிகஇலகுவாக கைப்பற்றியது. எனினும், அதன் பிறகு ஆட்டத்தின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. ஆவரங்கால் இந்து இளைஞர்கள் சளைக்காது போராடினார். இதனால், இரண்டாவது செற் 25:20 என ஆவரங்கால் இந்து வசமானது.

அதே உத்வேகத்துடன் ஆடிய, ஆவரங்கால் இந்து அணி, 3 ஆவது சுற்றையும் 25:23 என போராடி வென்றது. இதனால் நான்காவது சுற்றும் மேலும் விறுவிறுப்படைந்தது. எனினும், அந்தச் சுற்றை தமக்கே உரித்தான பாணியில் முழுமையாகக் கையிலெடுத்து ஆடிய புத்தூர் கலைமதி அணி, அந்தச் சுற்றை 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது. வெற்றியாளரைத் தீர்மானிக்க 5 ஆவது சுற்று நடத்தப்பட்டு, அதில் புத் தூர் கலைமதி அணி, 15:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

போட்டியின் நாயகனாக கலைமதியின் வாகீசன், தொடர் நாயகன் மற்றும் மக்கள் மனம் கவர்ந்த வீரராக ஆவரங்கால் இந்து வின்ஜனகன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்





## சகலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன தமது தீபாவளிச் செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார். அந்தச் செய்தியின் விவரம் வருமாறு:-

உலக வாழ் இந்துக்கள் தமது சமய வழிகாட்டல்களுக்கு அமைவாக தீமை மற்றும் அறியாமை ஆகிய இருளை விட்டகன்று ஞான ஒளியேற்றி தமது உள்ளங்களையும் இல்லங்களையும் கோவில்களையும் அலங்கரித்து கொண்டாடும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதையிட்டு பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

இவ்வுலகில் வாழும் எல்லா மனிதர்களும் இருளிலிருந்து விலகி ஒளியை நோக்கி செல்வதற்கே முயல்கின்றனர். மனிதன் தனது வாழ்க்கைச் சக்கரத்தை ஒளியை அடிப்படையாகக் கொண்டே அமைத்துக் கொள்கிறான். மனிதனின் ஆன்மீக வாழ்க்கைக்கும் லௌகீக வாழ்க்கைக்கும் ஒளியின் பங்கு மிக முக்கியமாக அமைகின்றது. அந்தவகையில் தீபாவளி தினத்தன்று இந்து பக்தர்களால் ஏற்றப்படும் தீப ஒளியானது, அவர்களது உள்ளங்களில் பிரகாசத்தை ஏற்படுத்துவதைப் போன்றே நம்நாட்டின் அனைத்து மக்களின் இதயங்களிலும் ஒளியேற்றி சகல இனங்களையும் ஒன்றிணைக்கும் ஒளிப்பாலமாக அது அமைய வேண்டுமென்பதே எனது பிரார்த்தனையாகும்.

ஒற்றுமையென்பது நமது நாட்டிற்கு மாத்திரமன்றி முழு உலகத்தினதும் இருப்புக்கு கட்டாயத் தேவையாக அமைந்துள்ள இன்றைய பொழுதில் இலங்கையர் என்ற வகையில் நாமும் இன, மத, சாதி என பிரிவடைந்து காணப்படுவதற்கு பதிலாக சகவாழ்வு, நல்லிணக்கம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு ஆழமான பிணைப்பு மிக்க புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட இவ்வாறான கலாசார விழாக்கள் பெரும் ஆதாரமாக அமையுமென்பதே எனது எண்ணமாகும்.

அந்தவகையில் இலங்கையர்களினாலும் உலகவாழ் இந்துக்களினாலும் மிகுந்த பக்தியுடனும் விழாக்கோலத்துடனும் கொண்டாடப்படும் தீபத்திருநாளானது, அதனைக் கொண்டாடும் அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சியையும் சுபீட்சத்தையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனப் பிரார்த்திப்பதுடன் அனைவருக்கும் எனது இனிய தீபாவளி வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளையில், தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான விசேட கவனவீர்ப்புப் பிரேரணை ஒன்றை முன் வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தமது உரையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதத் தடைச்சட்டம் தீங்கானது, தவறானது, பங்கம் தரக்கூடிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது என்றெல்லாம் நீங்கள்தான் சர்வதேச சமூகத்திடமும், ஐ.நா.விடமும் கூறினீர்கள். இதனால் இதற்கு மாற்றான – சர்வதேச நியமங்களுக்கு அமைவான – புதிய சட்டம் கொணடு வரப்படும் என்றீர்கள். 2015 இல் கூட ஐ.நா.வில் இதனைக் கூறினீர்கள்.

ஆனால் அதே சட்டத்தின் கீழ் தொடர்ந்து தமிழ்க் கைதிகளைத் தடுத்து வைத்திருந்து, தண்டித்து நீங்கள் தவறிழைக்கின்றீர்கள்.

இந்தத் தீங்கான சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமையால் – தடுத்து வைக்கப்பட்டமையால் – அவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்களை நீங்கள் தொடர்ந்து தடுத்து வைத்திருப்பதற்கு தார்மீக நியாயம் ஏதும் இல்லை.

எழுபதுகளிலும், எண்பதுகளிலும் இதேபோன்ற குற்றமிழைத்தத் ஜே.வி.பியினர் அனைவரையும், ஒரு தடவையல்ல, இரண்டாம் தடவையும் முழுக் குற்றப் பொறுப்புகளிலிருந்தும் விடுவித்து அரசியல் தீர்மானம் எடுத்தீர்கள்.

அதேமாதிரி இந்த அரசியல் கைதிகள் விடயத்திலும் நீங்கள் தீர்க்கமான ஓர் அரசியல் முடிவை எடுக்கவேண்டும்.

நீங்கள் இது விடயத்தில் கரிசனையுடன் நடக்காதமையால் எங்கள் மக்கள் உங்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்து வருகின்றார்கள். நாங்களும் கூட உங்களுக்கு சரியான அழுத்தத்தைக் கொடுக்கவில்லை என அவர்கள் கருதும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இதனால் மக்கள் மத்தியில் எங்கள் செல்வாக்கும் குறைகிறது.

பக்கம் 03 »

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து, அந்த உண்ணாவிரதத்தை ஒரு நாள் அடையாள உண்ணாவிரதமாக மாற்றி மாலையில் அதனை முடித்துக் கொண்டனர்.

அநுராதபுரத்தில் சாகும் வரையான உணவுத் தவிர்ப்பில் இருக்கும் கைதிகளின் கோரிக்கையை வலியுறுத்தியும், தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிக்கக் கோரியுமே இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் நாளை வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்புநடைபெறஉள்ளமைகுறித்து உண்ணாவிரதம் இருந்த மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

"ஜனாதிபதியுடனான சந்திப்பில் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் நாம் அழுத்தமாகப் பேசி தீர்வைப் பெற்றுக்கொள்ள போராடுவோம். எமது கோரிக்கைக்கு ஜனாதிபதி செவி சாய்க்காத நிலை ஏற்பட்டால், ஒட்டு மொத்த பல்கலை கழக மாணவர்களையும் ஒன்று திரட்டி தீர்வு கிடைக்கும் வரையில் போராடுவோம். அதுவரையில் இன்றைய போராட்டத்தைச் சற்று தளர்த்தி அதனை அடையாள உண்ணாவிரத போராட்டமாக மாற்றி இன்றுடன் போராட்டத்தை தற்காலிகமாக இடை நிறுத்துங்கள்." – என்று மாணவர் ஒன்றியம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களைக் கோரியது. அதனை ஏற்று மாணவர்கள் தமது போராட்டத்தைத் தற்காலிகமாக நேற்று மாலை 4 மணியுடன் முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

## வழக்குகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் –

அது குறித்து நாளை காலை நாடாளுமன்றக் கட்டடத்தில் உயர் மட்டக் கூட்டம் ஒன்றில் ஆராய்வதற்கு அரசு இணங்கியிருக்கின்றது.

தமிழ் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளையின் போது எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கொண்டு வந்த விசேட கவனவீர்ப்புப் பிரேரணையின் மீதான விவாதத்தில் இந்த இணக்கப்பாட்டிற்கு அரசு வந்தது.

இவ்விடயத்தை ஒட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரா. சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் கடுமையாகத் தமது கருத்துகளை முன் வைத்தமையை அடுத்து, இத்தகைய கூட்டம் ஒன்றைக் கூட்டி, ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு அரசுத் தரப்பில் இவ்விவாதத்தில் உரையாற்றிய சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்காவும் பிரதி நீதி அமைச்சர் மித்ரபிரியஷவும் இணங்கினர்.

நீதி அமைச்சர் தலதா அத்துக்கோறளை நாட்டில் இல்லை என நேற்று நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டது. நாளை மேற்படி கூட்டம் நடைபெறும் போது அவர் நாடு திரும்பிவிடுவார் என்றும் அந்தக் கூட்டத்தில் அவரும் பங்குபற்றுவார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

சட்டமா அதிபர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசுத் தரப்பினர், கூட்டமைப்புப் பிரதிநிதிகள் எனப் பல தரப்பினரும் நாளை காலை நாடாளுமன்றத்தில் கூடி, இவ்விடயம் குறித்து ஆராய்ந்து ஒரு முடிவை எட்டுவர் என நம்பிக்கை வெளியிடப்பட்டது. (உ)

## 3 வருடங்களாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா.சம்பந்தன் கொண்டு வந்த பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றுகையிலேயே சுமந்திரன் இவ்வாறு கூறினார்.

புதுடில்லியில் நடைபெற்ற இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பான அமைச்சர் மட்டக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக அங்கு சென்றிருந்த சுமந்திரன் நேற்று மாலை விமான நிலையத்தில் இறங்கிய கையோடு அங்கிருந்து விரைந்து நேரடியாக நாடாளுமன்றத்துக்கு வந்தார். சம்பந்தனின் பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றினார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

2015 இல் இந்த நல்லாட்சி அரசு அதிகாரத்துக்கு வந்த நாள் தொடக்கம் இந்த அரசியல் கைதிகள் விவகாரம் குறித்து நாம் பல தடவைகள் பல சுற்றுக்கள் இந்த அரசுடன் பேசிவிட்டோம். ஜனாதிபதியுடன் பேசினோம். பிரதமருடன் பேசினோம். சட்டமா அதிபருடன் பேசினோம், சட்ட அதிகாரிகளையும் அழைத்து வைத்துப் பேசினோம்.

இதன் பிரதிபலிப்பாக ஆக 70 முதல் 80 பேர் விடுக்கப்பட்டனர். ஆனால் அது அரசியல் தீர்மானத்தின் மூலமான விடுதலை அல்ல. சட்டரீதியான விடுவிப்பு மட்டுமே. அந்தக் கைதிகள் குற்றங்களை ஒப்புக் கொண்டமையினாலேயே புனர்வாழ்வு என்ற பெயரில் விடுவிக்கப்பட்டனர். அவ்வளவுதான்.

இந்த விடயத்தில் அரசு ஓர் அரசியல் தீர்மானம் எடுத்து அவர்களை விடுவிக்க வேண்டும் என நாம் வலியுறுத்தி வருகிறோம். ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளாக எதுவுமே நடக்கவில்லை.

ஜே.வி.பி. கிளர்ச்சியை அடுத்து அவர்களை ஒன்றுக்கு, இரண்டு தடவைகள் அரசியல் தீர்மானம் எடுத்து மன்னித்து விடுவித்தீர்கள். அதனால் இந்தக் கைதிகள் விடயத்தில் மட்டும் அப்படி ஒரு தீர்மானம் எடுக்க மறுக்கின்றீர்கள்? ஏன் இந்தக் கைதிகள் தமிழர்கள் என்பதாலா?

இவை, அரசியல் ரீதியாக ஏற்பட்ட நெருக்கடிகளால் உருவான குற்றங்கள். இவற்றை வெறுமனே நீதிமன்ற நெறிமுறையில் மட்டும் நோக்குவதில் அர்த்தமில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீதான தாக்குதல் வழக்கில் ஒரு பெண்மணி பதினேழரை வருடங்கள் சிறையில் இருந்த பின்னர் எந்தவித சாட்சியங்களும் அவருக்கு எதிராக இல்லை என்ற அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இதுவே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் அதர்மத்தை விளக்கப் போதுமானது.

இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் விவரத்தை வெளியிட்ட அமைச்சர், மேற்படி கைதிகளில் அவர்களில் இருவர் 1997 முதல் தடுப்பில் இருக்கின்றார்கள் என்றார்.

அப்படியானால் இருபது வருடங்கள் அவர்கள் கைதிகளாக இருந்திருகின்றார்கள். இலங்கை சட்டங்களின் படி ஒரு குற்றத்துக்கான ஆகக்கூடிய சிறைத் தண்டனை இருபது வருடங்களாகும். ஆக வழக்கு விசாரணை முடியாமலேயே அவர்கள் இருபது வருடங்கள் தண்டனை அனுபவித்துவிட்டார்கள்.

இத்தகைய பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்மானம் மூலம் முடிவு கட்டப்படவேண்டும். – என்றார் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

## ஒருங்கிணைப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளருமான ந.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தைக் கூட்டி அதில் இடைக்கால அறிக்கை தொடர்பாக விவாதிக்கப்பட உள்ளது.

சிவசக்தி ஆனந்தன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இடைக்கால அறிக்கை மற்றும் உள்ளூராட்சி, மாகாணசபை தேர்தல்களுக்கான புதிய சட்ட மூலம் ஆகியவை கொள்கை முடிவுடன் தொடர்புபட்ட விடயங்கள். ஆகவே அவற்றை நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தைக் கூட்டி அதிலெடுக்கப்படும் முடிவுகளை நாடாளுமன்றக் குழுக்கூட்டத்திற்குத் தெரிவிப்பதே சரியான ஜனநாயக அணுகுமுறை என்று நாம் கோரியிருந்தோம்.

எமது கோரிக்கையை நிராகரித்து, இலங்கை தமிழரசுக் கட்சியின் அங்கத்துவத்தை வலிந்து அதிகரித்துக்கொண்ட அந்தக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தன் தமது கட்சி பெரும்பான்மையாக திகழும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக்கூட்டத்தைக் கூட்டி அதில் இரண்டு விடயங்களையும் விவாதித்து அவற்றிற்கு ஆதரவு வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

இதில் அங்கத்துவக் கட்சிகள் மூன்றும் எதிர்த்தாலும் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்று வெளியுலகிற்குக் காட்ட முற்படுவதுடன், ஒட்டுமொத்த கூட்டமைப்பும் மக்களின் ஆணைக்கு மாறான இடைக்கால அறிக்கையை ஏற்றுக்கொண்டுவிட்டது என்றும் காட்டவும் முற்படுகின்றார்.

தமிழரசுக் கட்சியின் இந்த தன்னிச்சையான முடிவிற்கு நாம் ஒருபோதும் துணைபோக முடியாது. இடைக்கால அறிக்கை தமிழ் மக்களுக்கு சாதகமாக இருந்தாலும் சரி, பாதகமாக இருந்தாலும் சரி கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் தலைமைப்பீடத்துடன் விவாதிக்கப்பட்ட பின்னரே அது குறித்து முடிவு எடுக்கப்படவேண்டும்.

நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே கலந்துகொள்ள முடியும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சிக்குக் கட்டுப்பட்டவர்கள். ஆகவே கட்சிகளுடன் கலந்துரையாடாமல் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் விவாதத்தில் பங்கெடுப்பது என்பது இயலாத காரியம். நாடாளுமன்ற விவகாரங்களை மட்டுமே நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் விவாதிக்க முடியும்.

தமிழரசுக் கட்சியின் தலைமையில் உள்ளவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதை மட்டும் கவனத்தில் எடுத்து அங்கத்துவக் கட்சிகளைப் புறக்கணித்து தன்னிச்சையாக முடிவெடுத்து அரசாங்கத்திற்கு முண்டுகொடுக்கும் தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டை ஏற்க முடியாது.

இந்த விடயம் தொடர்பாக ஏனைய அங்கத்துவக் கட்சிகளான ரெலோ மற்றும் புளொட் ஆகியவற்றின் முடிவை அறிந்து கொள்வதற்காக 17.10.2017 செவ்வாய் அன்று காலை அவர்களுடன் தொடர்புகொண்டபோது அவர்களும் எமது கருத்தையே கொண்டுள்ளனர் என்பதை அறிய முடிந்தது.

தமிழரசுக் கட்சியின் குறுகிய அரசியல் நலன்களுக்காக எமது மக்களின் ஆணையையும் அவர்களின் அபிலாசைகளையும் மீறி எம்மால் செயற்படமுடியாது என்பதையும் அதே நேரத்தில் எம்மைப்படைக்காய்களாகப் பாவிக்கின்றமையை அனுமதிக்க முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். (உ–100)

## இனி,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமாகாண சபைக்கான அடுத்த தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் பிரதம நீதியரசர் ஸ்ரீபவனை நியமிப்பதற்கு தமிழசுக் கட்சி அவருடன் பேச்சு நடத்தியிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியானது. இது தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு விளக்கமளிக்கையிலேயே சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

ஊடகங்களில் சில செய்திகள் ஊகத்தின் அடிப்படையில் வெளிவருகின்றன. இருப்பினும் இறக்குமதிகளின் அனுபவம் தமிழரசுக் கட்சிக்கு உண்டு. இனிவரும் காலங்களில் எந்தத் தேர்தலாக இருந்தாலும் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில், இந்த மண்ணிலே எங்களோடு நின்று, கட்சியோடு நின்று, கட்சியோடு பாடுபட்டவர்கள்தான் தேர்தல்களில் பங்குபற்றலாம். ஸ்ரீபவனுக்காக நான் இந்தக் கருத்தைக் கூறவில்லை. பொதுவாகவே வெளியிலிருந்து வருபவர்கள் யாரையும் நாம் இனி வரும் காலங்களில் முதலமைச்சராக ஏற்றுக்கொள்ளப்போவதில்லையெனத் தெளிவாக முடிவெடுத்துள்ளோம். – எனத் தெரிவித்தார்.

# சூழலைப் பாதுகாப்பதற்கான பொறுப்பை நிறைவேற்ற சகலரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்!

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



எதிர்காலச் சந்ததியினருக்காகச் சுற்றாடலைப் பேணுவதற்கும் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் நாட்டில் அமுல்படுத்தப்பட வேண்டிய சகல செயற்றிட்டங்களும் தாமதமின்றி நிறைவேற்றப்படும் என்றுஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற Sri Lanka NEXT நீல பசுமை யுகத்துக்கான தேசிய செயற்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு மற்றும் 2017 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீல பசுமை யுகத்துக்கான தேசிய செயற்றிட்டம் நேற்று ஆரம்பமாகி இன்றும் -இரு தினங்கள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற விருப்பதுடன் அதனுடன் இணைந்ததாக விரிவுரைகள், மாநாடு மற்றும் விவாதங்கள் என்பனவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 2015 ஆம் ஆண்டு பரிஸ் நகரில் இடம்பெற்ற உலகளாவிய காலநிலை மாற்றங்கள் பற்றிய அரச தலைவர்களின் மாநாட்டில் பூகோள வெப்பமயமாதலை கட்டுப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் தீர்மானிக்கப்பட்டன.

ஆசிய வலய நாடு என்ற வகையில் இலங்கை முதலாவதாக அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதுடன், பசுமை அபிவிருத்தி தொடர்பான பல்வேறு துறைகளிலும் விசேட கவனம் செலுத்தி நீலப்பசுமை யுகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கும் தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

சிமெந்து கட்டடங்கள் நிறைந்த நகரச் சூழலிலிருந்து விடுபட்டு மரங்கள், இலை, செடிகொடிகள், நீரோடைகள் என்பவற்றுடன் போஷிக்கப்பட்ட இயற்கையைப் பாதுகாத்து நாட்டை பசுமை அபிவிருத்தியை நோக்கி கொண்டுசெல்ல அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

சூழலானது மனிதனுக்கு சவால்மிக்க காரணியாக மாறியுள்ள தற்காலத்தில் சூழலைப் பாதுகாப்பதற்கான தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் சகலரும் தாமதமின்றி அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது சுற்றாடல் விருதுகள் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

இந்த நிழ்வில் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, மஹிந்த அமரவீர, பைசர் முஸ்தபா, தயா கமகே, பிரதி அமைச்சர் அனுராத ஜயரத்ன உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் சார்க் நாடுகளின் சூழலியலாளர்கள், புத்திஜீவிகள் உள்ளிட்ட உள்நாட்டு, வெளிநாட்டு பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## தீபாவளியை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள்!



கொழும்பு, ஒக். 18

தீபாவளி பண்டிகைக்காக கிராமங்களுக்கு செல்லும் பொதுமக்களின் நலன்கருதி விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இந்த சேவைக்காக மேலதிகமாக 80 பஸ்கள் சேவையில் ஈடுபட வுள்ளன என இலங்கை போக்குவரத்து சபையின் பிரதான கண் காணிப்பு அதிகாரி பி.எச்.ஆர்.டீ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அதிவேக நெடுஞ்சாலையின் போக்குவரத்து நடவடிக்கைகளும் சிறந்த முறையில் நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என இலங்கை போக்குவரத்து சபையின் பிரதான கண்காணிப்புஅதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (க)

## ஜி - 24 மாநாட்டின் தலைமைத்துவம் இலங்கைக்கு!



கொழும்பு, ஒக். 18

அமெரிக்காவில் இம்முறை நடைபெறும் ஜி-24 மாநாட்டின் தலைமைத்துவம் நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதே உறுப்பு நாடுகளின் கூட்டு பொறுப்பாக இருக்கவேண்டுமென்பதை அமைச்சர் மங்கள சமரவீர சுட்டிக் காட்டினார்.

இம்முறை ஜி-24 மாநாட்டின் தொனிப் பொருள், அபிவிருத்தி தொழில்வாய்ப்பு மற்றும் கட்டமைப்பு ரீதியான மாற்றம் என்பதாகும்.

ஜி-24 மாநாட்டு அமைப்பின் கடந்த கால அனுபவங்களைக் கருத்திற்கொண்டு முக்கியத்துவங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்காக வினைத் திறனை அதிகரித்தல், அபிவிருத்திக்கான நிதியை வழங்குதல் என்பன கருத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும் என்றும் சுட்டிக்காட்டிய அமைச்சர் , சர்வதேச வர்த்தகம், புதிய உற்பத்திகள், தனியார் துறையின் முதலீடுகளை விருத்தி செய்தல் என்பன தொடர்பில் கவனம்செலுத்தப்படவேண்டுமென்றும் கூறியுள்ளார்.

## கல்வி வலைப்பின்னலின் மேம்பாட்டுக்கு தீர்க்கமான முடிவுகளை எடுப்போம்!

### அமைச்சர் அகிலவிராஜ் 'காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 18

கல்வி வலைப் பின்னலின் மேம்பாட்டுக்காகத் தீர்க்கமான தீர்மானங்களை எடுப்பதற்குப்பின்னிற்கப்போவதில்லை என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேவி பாலிகா கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமது இடமாற்றங்களைத் தடுக்கும் நோக்கில் பிள்ளைகளைத் தூண்டும் ஆசிரிய, ஆசிரியைகளுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிய சிறுவர் ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவியருக்கு இதன் போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## மக்கள் விடுதலை முன்னணி அரசியல் மேடையில் இலங்கையின் முன்னாள் குறுந்தூர ஓட்வீரர்!

இலங்கையின் முன்னாள் குறுந்தூர ஓட்டவீரரும், இலங்கை தடகள சங்கத்தின் முன்னாள் தலைவருமான சுகத் திலகரத்ன, மக்கள் விடுதலைமுன்னணியின் அரசியல் மேடையில் பங்கேற்றுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி நேற்று கம்பஹா மாவட்டத்தில் நடத்திய நிகழ்வொன்றில் சுகத்திலகரத்ன கலந்துகொண்டிருந்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க கலந்து கொண்டிருந்த இந்த நிகழ்வில் சுகத் திலகரத்ன உரைநிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வறட்சியால் 18 மாவட்டங்களிலுள்ள பதினேழு லட்சம் மக்கள் பாதிப்பு!

கொழும்பு,ஒக்.18

நாட்டில்தொடர்ந்தும் நிலவி வரும் வறட்சி காரணமாக 18 மாவட்டங்களில் உள்ள 17 லட்சத்துக்கும் அதிகமான வர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் 2 லட்சத்து 88 ஆயிரத்து 784 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 2 லட்சத்து 52 ஆயிரம் பேரும் மற்றும் திருகோணமலையில் ஒரு லட்சத்து 78 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

மேலும் மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மாற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் வறட்சி நிலவுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## மித்ரசக்தி - தீவிரவாதத்துக்கு எதிரான இலங்கை - இந்திய கூட்டுப் பயிற்சி!

இந்திய - இலங்கை இராணுவத்தினர் பங்கேற்கும், 'மித்ரசக்தி' கூட்டுப் பயிற்சி நடைபெற்றுவருகிறது.

ஐந்தாவதுதடவையாக ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இந்தக்கூட்டு இராணுவப் பயிற்சியில் இலங்கை இந்திய இராணுவத்தின் உயர்நிலை அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.

தீவிரவாதத்துக்குஎதிர்ப்பு நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் இரு நாடுகளினதும் உயரிய இராணுவதொழில் நுட்பங்கள்பயன்படுத்தப் படவுள்ளதோடு, புனேயில் உள்ள இரண்டாவது காலாட் படை பற்றாலியன் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இலங்கையில் இருந்து சென்றுள்ளசிங்கப் படைப் பிரிவின் அணியினரும், இந்திய இராணுவத்தினரும் இணைந்து ஆரம்ப அணிவகுப்பில் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டுப் பயிற்சியின் மூலம் தீவிரவாதத்துக்கு எதிரானசெயற்பாடுகளில் இரு நாடுகளும் புரிந்துணர்வுடன் செயற்படுவதோடு, தீவிரவாதத் தாக்குதல்களிலிருந்து தத்தமது நாடுகளைப் பாதுகாத்துக்கொள்ள முன்னேற்பாடுடன்செயற்படுவதாக உலகுக்கு அறிவிப்பதே நோக்கமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

14 நாள்கள் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி எதிர்வரும் 26ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



எமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

தூய்மையானதும்
நீண்டகாலம்
பாவிக்கக்
கூடியதுமான
இல்லத்தரசிகளின்
ஒரே தெரிவு







LITRO GAS லிற்றோ

தேசிய எரிவாயு
ஏக விநியோகஸ்தர்

S.V. முருகேசு

No. 154 Hospital Road, Jaffna.
T.P : 021 222 8899, 021 492 5831
No. 106 Hospital Road,Jaffna.
T.P : 021 492 5830,021 222 4341
Fax: 021 222 4341

---

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

அனைவருக்கும் இனிய
தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



Since 1982
Rube
Jewellery

தங்க நகை உலகில் 34
வருடங்கள் அனுபவம்
வாய்ந்த நாங்கள் உலகின் பல
பாகங்களிலும் இருக்கும் எமது
வாடிக்கையாளர்களுக்கு
சிறந்த சேவையினை வழங்கிக்
கொண்டிருக்கின்றோம்
என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

ரூபி
ஜுவல்லறி

நம்பிக்கை, கைராசி மற்றும் தரம்குன்றா
சிங்கப்பூர் தரத்திலான தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

ரூபி ஜுவல்லறி

இல: 227 – 229, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:021 221 6919, 077 734 4074





யாழ்நகரிலோ, இலங்கையிலோ
எமக்கு வேறு எங்கும் கிளைகள் கிடையாது

---

# கிருபா சாரதிப் பயிற்சிப் பாடசாலை

# KIRUBA LEARNERS



வட மாகாணத்தின் முதல் தர

அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக
சாரதிப் பயிற்சிப் பாடசாலை
திறமையான சாரதிகள் ஆக வேண்டுமா?
கிருபா லேணர்ஸ் உடன் இணையுங்கள்.

**சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்**

- அடையாள அட்டை
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதி)
- திருமண அத்தாட்சிப் பத்திரம் (பெண்கள் மட்டும்)
- சாரதி அனுமதிப்பத்திரம் (வைத்திருந்தால்)
- தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் வழங்கும் மருத்துவச் சான்றிதழ்

★தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.
★பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், மாதிரி வினாத்தாள் இலவசமாக வழங்கப்படும்.
★விரைவில் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு விசேட வீதிஒழுங்குவகுப்புக்கள்நடைபெறவுள்ளன.
★விரைவில் எழுத்துப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்து LEARNER PERMIT பெற்றுத் தரப்படும்.
★License விண்ணப்பிக்கும் ஒழுங்குகள் எங்கள் காரியாலயத்திலே செய்து தரப்படும்.
★உடைந்த, தொலைந்த தெளிவில்லாத License புதுப்பிக்க ஒழுங்கு செய்து தரப்படும்.
★சர்வதேச லைசன்ஸ் International License பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி உண்டு.
★இலவச எழுத்துப் பரீட்சை வகுப்புகள்.

## தலைமைக் காரியாலயம்

**இல.226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்**

021 222 4353 021 492 3200
0777225292

ஏ9 வீதி, **கிளிநொச்சி.**
021 228 5505,
0714546955.

இல.94, பிரதான வீதி,
**மன்னார்**
023 225 1656,
0778472732

216, ஏ9 வீதி ,
**வவுனியா.**
(வசந்தி திரையரங்கு முன்)
0242227777,
0777100444

## எமது கிளைகள்

யாழ். கச்சேரியடி, இல.36
கச்சேரி நல்லூர் வீதி , **யாழ்ப்பாணம்.**
021 222 6699 , 076 7225 292

இல.227/ 6, கே.கே.எஸ். வீதி
சுன்னாகம். (முதவடி அருகில்)
021 224 2022 , 0714546956.

ஓம் பிளாசா , பருத்தித்துறை வீதி ,
**ஆவரங்கால்.**
021 222 6688 , 071 242 2622.

பிரதான வீதி, **நெல்லியடி.**
(பொலிஸ் நிலையம் முன்பாக)
021 300 6550, 0714546958

முதலாம் கடைச் சந்தி, **பருத்தித்துறை.**
021 4923 201, 0714546961

கண்டி வீதி, **சாவகச்சேரி.**
(நீதிமன்றம் அருகில்)
021 4923 202, 0712270700.

வாடியடிச் சந்தி, **பூநகரி.**
021 320 1818, 071 4546955.

புளியடிச் சந்தி, முல்லை வீதி,
**விசுவமடு.**
0213201515, 0714546955.

நாச்சிக்குடாச் சந்தி, மன்னார் வீதி,
**முழுங்காவில்.**
021 3006544, 071 4546955

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.